Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-17 | 03-10-2005 | திங்கட்கிழமை | ஓசை-228



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247

# ஐரோப்பிய யூனியனின் தடை நியாயமற்றது

# தாமதம் ஏதுமின்றி நீக்க வேண்டும்!

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து

(திருகோணமலை)

**ஐரோப்பிய யூனியன் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதித்துள்ள பயணத் தடை நியாயமற்றதாகும். இத்தடையை தாமதமின்றி நீக்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஐரோப்பிய யூனியனை வலியுறுத்துகின்றது.**


இவ்வாறு கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுவின் தலைவரும், திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் நேற்றுக்காலை திருகோணமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வை திருமலையில் நடத்துவது பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

சம்பந்தன் மேலும் கூறுகையில்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் வரும் 22 ஆம் திகதி தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வு

எதிர்வரும் 22 ஆம் திகதி திருகோணமலையில் தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று முற்பகல் 10 மணிக்கு பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடை பெற்றது.

ஓய்வுபெற்ற வலயக் கல்விப்பணிப்பாளர்க.தங்கராசா தலைமை வகித்தார். திருமலை மாவட்டப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பன்னிரு வேங்கைகள் நினைவுநாள் புதன்கிழமை அனுஷ்டிக்க ஏற்பாடு

இந்திய-சிறிலங்கா கூட்டுச் சதியால் வீரச்சாவடைந்த லெப்.கேணல்குமரப்பா, லெப்கேணல் புலேந்திரன் உட்பட பன்னிருவேங்கைகளின் 18ஆம் ஆண்டு நினைவு கூரல் நிகழ்வுகள் வரும் புதன்கிழமை உணர் வெழுச்சியுடன் நடைபெறவுள்ளன.

அன்று காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு கருத்தரங்குகள், சிரமதானப்பணிகள் இடம்பெறவுள்ளன.

மாலை 5.05 மணிக்கு பொதுச்சுடரேற்றி, தேசியக் கொடியேற்றலுடன் பன்னிரு வேங்கைகளின் உருவப்படங்களுக்கு சுடரேற்றி மாலையிட்டு, மலர் வணக்கம் செலுத்தப்படும். பின்னர் அகவணக்கத்தையடுத்து நினைவுரைகள் நடைபெறும்.

பிரதேச ரீதியான பொதுக் கூட்டங்கள் மாலை ஏழு மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். இதனை முன்னிட்டு இப்பன்னிரு வேங்கைகளின் நினைவுத் தூபிகள், படங்கள் அமைக்கப்பட்ட இடங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் அலங்கரிக்கும் பணி கள் நடைபெறுவதுடன் நிகழ்வுகளுக்கான ஏற்பாடு களும் ஆரம்பமாகியுள்ளன.

## ஓமந்தை ராணுவச் சோதனைச்சாவடியில் சம்பந்தன் பா.உ. மீது கெடுபிடி

வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடியில் தமிழ்க்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இருந்து திரும்பி வரும் பொழுது அவரது உத்தியோகபூர்வ வாகனமும், உடமைகளும் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரிடம் பாராளுமன்ற உறுப்பினர் தமது அடையாளத்தை

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீச்சு

(வவுனியா செய்தியாளர்)

பண்டாரிக்குளம் மின்மாற்றி சந்திக்கு அருகாமையில் உள்ள வீடொன்றின் மீது நேற்று அதிகாலை 5.30 மணிக்கு தொடர்ச்சியான பெட்ரோல் குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் போது இவ் வீட்டின் மீது தொடர்ச்சியாக மூன்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திற்கு அடுத்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு 1300 கோடியால் அதிகரிப்பு!

சிறிலங்கா இராணுவத்துக்கான 2006 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு 6947 கோடியாக உயர்த்தப்படுகிறது. கடந்த ஆண்டு இது 56,30 கோடியாக இருந்தது. தற்போது ரூ.1300 கோடி கூடுதல் தொகையை இராணுவத்துக்கு ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சிறிலங்கா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள இராணுவ நிதிநிலை அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் மொத்தச் செலவு ரூ. 56800 கோடியாகும். கடந்த ஆண்டில் செலவு ரூ.43800 கோடியாக இருந்தது.

கல்வி அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு 26,050 மில்லியனிலிருந்து ரூ.34,009 மில்லியனாகவும் போக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## இம்ரான் - பாண்டியன் படையணியின் 13ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வும் "தேசத்தின் புயல்கள் -04" ஒலிநாடா வெளியீடும்

(அலுவலக செய்தியாளர்)

லெப். கேணல் இம்ரான் - பாண்டியன் படையணியின் பதின்மூன்றாம் ஆண்டு நிறைவு நிகழ்வும் "தேசத்தின் புயல்கள் பாகம் 04" ஒலிநாடா உருவாக்க கலைஞர்கள் கௌரவிப்பும் ஒலிநாடா அறிமுக விழாவும் நேற்று சிறப்புற நடைபெற்றுள்ளது.

விசேடமாக ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை விடுதலைப்புலிகளின் முக் கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்

(12ஆம் பக்கம் பார்க்க)





(படம் : குகன்)

# Sri Lanka Red Cross Society

## Working in conjunction with the Australian Red Cross (ARC)

ARC has begun working on the construction of nearly 500 permanent houses families affected by war and the tsunami in Vadamarachi East. we are presently expanding our operations team and are seeking to fill the below positions. A very competitive salary will be offered to well qualified applicants. All positions are based in kilinochchi.

### 1.community liaison officer

Seeking an individual who has very well developed discussion/ negotiation skills,a strong grasp of concepts of community participation in decision-making,is able to work independently,and is willing to travel within kilinochchi District.

**specific responsibilities**

(i) Acting as the primary contact between the ARC project manager and beneficiary communities.

(ii) Hold regular meetings with community representatives in order to gauge their opinion and wishes.

(iii) Ensuring that the communities.viewpoints are clearly articulated in the process of house and infrastructure design.

(iv) Prepare and implement community surveys, and analyse the data collected.

(iv) To contribute to project management and work with varied stakeholders that inclined architects ,engineers ,project managers and local authorities.

**Qualifications**

(i) degree level education preferably in social work anthropology or related discipline.

(ii)Minimum three years experience in similar position.

(iii) Good spoken Engligh and a car/motorcycle license are a cossiderable advantage.

**2. Field officer**

seeking an individual with a background in logistics or a construction-related discipline.The successful applicant will work closely with project and construction managers in order to monitor activities and ensure effective project implementation. Considerable travel to sites in kilinochchi district will be required.

**Specific responsibilities**

(i) Monitoring the progress of house and infrastructure construction in accordance with project plans

(ii) Ensuring adherence to agreed construction standards.

(iii)Liaise with contactors and consultants to ensure standards and schedules are adhered to.

(1v) managing all construction-related administration.

(v) managing ARC logistics as needs require in kilinochchi and jaffna

**Qualifications**

(i) Diploma level education in logistics or construction -related discipline

(ii) Good spoken and written English

(iii) Proficient with PC functions,specifically word-processing software.

(1V) Motorcycle or car license.

**3.interpreter**

seeking individual to work closely with expatriate staff members.The successful applicant will be fluent in both Tamil and English.INGO experience and demonstrable initiative are advantageous.

• Specific responsibilities

(i) interpreting between Tamil and English

(ii) Minor logistics and administrative tasks as needs arise

**Qualifications**

(i) Diploma level English

**04 Driver**

seekeing careful experienced drivers with knowledge of 4x4 vehicles. knowledge of radio procedures and good spoken English is a considerable advantage.

Specific responsibilities.

(i) Driving national and expatriates to site locations in kilinochchi and to jaffna with occasional travel elsewhere in Srilanka.

(ii) Managing vehicle in accordance with Red Cross procedures.

(iii)Ensuring vehicle is well maintained and has regular services.

**Qualifications**

(i) Secondary school certificate.

The deadline for application is 7 October.Only short-listed candidates will be contacted Bio-data and a covering letter outlining why you consider yourself suitable for the position should be sent under registered mail to.

Branch Executive officer Srilanka Red Cross Society jaffna Branch no 73 kandy Road jaffna.

Clearly mark envelopes with ARC vacancies.

For all positions applicants with additional skills (over and above those noted above for the specific positions applied for) relevant to community development and construction project management will be a considerable advantage Applicants are encouraged to outline all relevant skills and experience.

(சி.12868)



# வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம்

NESOHR

## சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில்

# பேச்சு, கவிதை, கட்டுரை

# போட்டிகள்

2005 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம், இத்தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி என்பன நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நோக்கம்**

- ☐ மனித உரிமைகள் பற்றி அறிதலையும் அறிவையும் அடிமட்டத்தில் இருந்து வளர்த்தெடுத்தல்.
- ☐ மாணவர்கள் மத்தியில் மனித உரிமைகள் பற்றிய கற்கைநெறியை தூண்டுதல்.
- ☐ மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் எவ்வாறு தீர்வு காண்பது எனும் சிந்தனையை வளர்த்தல்.

போட்டிகள், பங்குபற்றும் பாடசாலைகளிலேயே நடத்தப்படும். தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெறும் நிகழ்வுகள் சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று அரங்கேற்றப்படும். அத்துடன் தேசிய ரீதியில் (வடகிழக்கு மாகாணத்தில்)

1 ஆம் இடம்பெறுபவருக்கு தங்கப்பதக்கமும்,

2 ஆம் இடம்பெறுபவருக்கு வெள்ளிப்பதக்கமும்,

3 ஆம் இடம்பெறுபவருக்கு வெண்கலப்பதக்கமும் சான்றிதழ்களுடன் வழங்கப்படும். வலய ரீதியில் வெற்றி பெறுபவர்களுக்கு பொருத்தமான பரிசும் சான்றிழ்களும் வழங்கப்படும்.

**நிபந்தனைகள்**

**அ) பேச்சுப்போட்டி**

இரு பிரிவுகளைக் கொண்டதாக அமையும்.

– கனிஸ்ட பிரிவு – 9ஆம், 10ஆம், 11ஆம் ஆண்டு மாணவர்கள்.

– சிரேஸ்ட பிரிவு – 12 ஆம், 13ஆம் ஆண்டு மாணவர்கள்.

பேச்சு 05 நிமிடங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

பேச்சுக்கான தலைப்பு தரப்படும்.

விடயங்கள் அடிப்படை மனித உரிமைகளைப் பிரதிபலிப்பதுடன் அவை மீறப்படும் விதங்களை துல்லியமாக வெளிக்காட்ட வேண்டும்.

**ஆ) கட்டுரைப் போட்டி**

கட்டுரைப் போட்டிகள் கனிஸ்ட, சிரேஸ்ட பிரிவுகளாக நடத்தப்படும். வழங்கப்படும் தலைப்பில் கனிஸ்ட பிரிவு 180 சொற்களிற்கு மேற்படாமலும், சிரேஸ்ட பிரிவு 300 சொற்களிற்கு மேற்படாமலும் சுருக்கமாக எழுதி முடிவுத் திகதிக்கு முன் பாடசாலை அதிபரிடம் கையளிக்க வேண்டும்.

**இ) கவிதைப் போட்டி**

இப்போட்டியும் இரு பிரிவுகளைக் கொண்டதாக அமையும். சிரேஸ்ட பிரிவு பெண்கள் உரிமைகள் பற்றியும், கனிஸ்ட பிரிவு சிறுவர் உரிமைகள் பற்றியும் தட்டச்சுத் தாளில் ஒரு பக்கத்திற்கு மேற்படாமலும் எழுதுதல் வேண்டும்.

இப்போட்டிகள் யாவும் 2005 ஆண்டு ஐப்பசி மாதம் 30 ஆம் திகதிக்கு முன் நடத்தி முடிக்கப்படல் வேண்டும்.

**கட்டுரைப் போட்டிக்கான தலைப்பு**

**கனிஸ்ட பிரிவு**

1. "வலிமையானவனுக்கும் வலிமையற்றவனுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடே மனித உரிமை மீறலின் அடிப்படையாகும்.,
2. "எதேச்சையதிகார ஆட்சியில் மனித உரிமை மீறல் என்பது சர்வ சாதாரணம்.,
3. "அறிவு சார்ந்த நவீன உலகிலும் மனித உரிமைகள் மீறப்பட்டே வருகின்றன.,

**சிரேஸ்ட பிரிவு**

1. வடகிழக்கிற்கு தனியான மனித உரிமைகள் அமைப்பு அவசியம்.
2. "யுத்த காலத்திலும் சரி, சமாதான காலத்திலும் சரி பெரும்பாலான மனித உரிமை மீறல்களுக்கு முகம் கொடுப்பவர்கள் பெண்களும் சிறுவர்களுமே"
3. "மனித உரிமைகளின் முக்கியத்துவம் யுத்த காலங்களிலேயே அதிகம் உணரப்படுகின்றன".
4. "மனித உரிமைகள், மனிதாபிமானம், மனிதநேயம் என்பன தொனிப்பொருளில் வேறுபடுகின்ற போதிலும் கருப்பொருளில் ஒன்றே".

பேச்சுக்கான தலைப்புக்கள்

கனிஸ்ட பிரிவு

1. சர்வதேச மனித உரிமை மீறலை ஐ. நா. சபை தடுக்க முயல்கிறது.
2. உலகச் சிறுவர்கள்.
3. அடக்கு முறையும் பெண்களும்.

சிரேஸ்ட பிரிவு

1. வடக்கு கிழக்கு மாகாணத்தில் மனித உரிமைகள்
2. மனித உரிமைப் பிரகடனமும் மகளிரும்
3. மனித உரிமைகளும் இலங்கை அரசும்.
4. "சுதந்திரமாகப் பிறக்கும் மனிதன் அடிமையாகச் சாகிறான்".

கரடிப்போக்கு சந்தி,
கிளிநொச்சி.

தொ.பே.இல. 021 2285986

(சி-12891)

# சூறாவளியால் பெரிதும் பாதிக்கப்பட்ட லூசியானாவில் பிரச்சினை ஓயவில்லை




அமெரிக்காவில் சூறாவளி தாக்கிய நியூ ஓர்லியன்சில் வெள்ளம் வடிந்த பகுதியை பார்வையிடும் ஒருவர்

(பேடன் ரூஜ்)

**கற்றினா மற்றும் 'றீற்றா' சூறாவளி தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட லூசியானா மாகாணத்தின் சில இடங்களுக்கு மக்களை செல்லுமாறு கூறியுள்ள நிலையில், அங்கு புதுவித பிரச்சினை உருவாகியுள்ளது. இந்த மாகாணத்திலுள்ள நீர் நிலைகளில் 3.6 கோடி லீற்றர் கச்சா எண்ணெய் கலந்து வீட்டதே மேற்படி சிக்கல் நிலையை தோற்றுவித்துள்ளது.**

அமெரிக்காவில் டெக்சாஸ் மற்றும் லூசியானா மாகாணங்கள் மெக்சிக்கோ வளைகுடாப் பகுதியில் அமைந்துள்ளன. இந்த இரு மாகாணங்களின் கடற்கரை பகுதிகளில் ஏராளமான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் இருக்கின்றன. கடந்த மாதத்தில் கற்றினா மற்றும் றீற்றா' சூறாவளிகள் அடித்ததில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கச்சா எண்ணெய் இருப்பு வைக்கப்பட்டிருந்த குதங்கள் சேதமடைந்ததில் எண்ணெய் வெளியேறி வெள்ளத்துடன் கலந்து தற்போது நீர் நிலைகளில் தேங்கியுள்ளது.

இதுபோல் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் பீப்பா (3.6 கோடி லீற்றர்) எண்ணெய் நீர்நிலைகளில் தேங்கியுள்ளது. இது விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே நீர்நிலைகளில் தேங்கியிருக்கும் எண்ணெய்ப் படலத்தை அகற்றும் பணி நடந்து வருகிறது. இதுவரை 65 ஆயிரம் பீப்பா எண்ணெய் அகற்றப்பட்டு விட்டது. 70 ஆயிரம் பீப்பா எண்ணெய் ஆவியாகி கரைந்து விட்டது. மீதி 55 ஆயிரம் பீப்பா எண்ணெய் நீர் நிலைகளில் தேங்கியுள்ளது. இவற்றை அகற்றும் பணி வேகமாக நடந்து வருகிறது.

அத்துடன் சூறாவளியால் பாதிக்கப்பட்ட ஏராளமான நாரைகள், சதுப்பு நிலங்களில் வாழும் ஒருவகை கோழிகள், பாலூட்டி மற்றும் ஊர்வனபோன்ற உயிரினங்கள் மீட்கப்பட்டுள்ளன. எண்ணெய்ப் படலத்தை அகற்றும் பணிக்கு எவ்வளவு செலவாகும் என்ற தகவல் கிடைக்கவில்லை. லூசியானாவின் மேற்கு பகுதியில் இந்தப் பணி வேகமாக நடந்து வருகிறது. இங்குள்ள நீர்நிலைகளை சென்றடைய வீதி வசதி உள்ளதால் சிக்கல் ஓரளவுக்கு குறைந்துள்ளது. மற்றப் பகுதிகளில் உள்ள நீர் நிலைகளுக்கு செல்ல படகுகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இது மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

## பெங்களூரில் பேருந்து விபத்து 15 பேர் பலி; 50 பேர் காயம்

பெங்களூர் மகாதி என்ற இடத்திற்கு அருகே உள்ள ஜமால் சப்ரபாலியா என்ற பகுதியில் 80 இற்கும் அதிகமானோர் பயணம் செய்து கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானதில் 15 பேர் பலியாயினர். 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அனைவரும் அருகே உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் பேருந்தின் அடியில் பலர் சிக்கியிருப்பதால் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள பர்பாங் பகுதியில் காட்டுத் தீ பரவி வருகிறது. கடந்த ஒரு வாரமாக போராடியும் காட்டுத் தீயியை அணைக்க முடியவில்லை. தீயை அணைக்கும் முயற்சியில் உலங்குவானூர்தி.

## வெடிமருந்து களஞ்சியக் கிடங்கில் தீ ரஷ்யாவில் ஆயிரக் கணக்கானோர் வெளியேற்றம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் பீரங்கிக் குண்டுகள் சேமித்து வைத்திருக்கும் கிடங்கில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து பீரங்கி மற்றும் வெடி மருந்துக் கிடங்குகளில் வேலை செய்வோர் உட்பட ஏழாயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களிற்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவில் கிழக்குக் கோடியில் பசுபிக் கடல் பகுதியில் உள்ள தீபகற்பப் பகுதியான காம்சாட்காவில் ரஷ்யாவிற்கு சொந்தமான பீரங்கிக் குண்டுகள் சேமித்து வைக்கும் கிடங்கு உள்ளது. இங்கு நேற்று முன்தினம் அதிகாலை திடீரென தீ பிடித்துக் கொண்டது. இதனால் குண்டுகள் வெடித்துச் சிதறி வானு யரத்திற்கு நெருப்பை உமிழ்ந்தன. சில விநாடிகளுக்கு ஒரு முறை பீரங்கிக் குண்டுகள் வெடித்துச் சிதறின.

இது குறித்து பசுபிக் பகுதிக்கான ரஷ்ய படைப்பிரிவின் செய்தித் தொடர்பாளர் இகோர் மாய்போர்டோவ் தெரிவித்ததாவது:-

நள்ளிரவு 1.30 மணிக்கு பீரங்கிகள் மற்றும் வெடிமருந்துகள் குவித்து வைக்கப்பட்டிருந்த கிடங்கில் தீ பிடித்தது. வெற்றிகரமாக தீயை அணைக்கும் பணி இடம் பெற்றுள்ளது. ஆனால் குண்டுகள் சில அவ்வப்போது வெடித்துக் கொண்டிருக்கின்றன. இராணுவ வீரர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். இதில் இராணுவ வீரர்களுக்கோ ஏனைய பணியில் இருந்தவர்களுக்கோ எந்தப் பாதிப்பும் இல்லை.


என இகோர் தெரிவித்தார்.

ஆனால் இந்த தீ விபத்துச் சம்பவத்தில் படை வீரர்கள் ஐந்து பேர் இறந்திருக்கலாம் என செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. மற்றைய சேதங்கள் குறித்து உடனடியாகத் தகவல்கள் கிடைக்கவில்லை.

வெடி விபத்துக் காரணமாக 50 கி.மீ தொலைவு வரை உள்ள ஒன்பது கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

காம்சாட்காவில் ரஷ்யாவின் மிக முக்கியமான கடற்படைத் தளம் உள்ளது. இந்த பகுதியில் தான் சமீபத்தில் ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பல் கடலுக்குள் 200 மீற்றர் ஆழத்தில் ஆய்வுப் பணியில் ஈடுபட்ட போது ஆபத்தில் சிக்கிக்கொண்டது பின்னர் கடற்படையைச் சேர்ந்தவர்களால் நீர் மூழ்கிக் கப்பல் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேஷியாவில் தற்கொலைத் தாக்குதல் 25 உல்லாச பயணிகள் பலி; 51 பேர் படுகாயம்



(பாலி)

இந்தோனேஷியாவில் இரண்டு வெவ்வேறு இடங்களில் நடத்தப்பட்ட தற்கொலைப் படை குண்டுத் தாக்குதலில் 25 பேர் பலியாயினர். இதில் 51 இற்கும் மேற்பட்டோர் படு காயமடைந்தனர். இந்தோனேஷியா பாலியில் உள்ள சுற்றுலாத் தலமான குடாவில் உள்ள முக்கிய இடம் மற்றும் ஜிம்பரான் கடற்கரைப் பகுதியில் உள்ள வணிக வளாக மையம் உட்பட இரண்டு இடத்தில் நேற்று குண்டு வெடித்தன. இந்தச் சம்பவத்தில் 25 பேர் பரிதாபமாக பலியாயினர். 51 பேர் படுகாயமடைந்தனர். பெருமளவானோர் வெளி நாட்டைச் சேர்ந்தவர்கள் காயமடைந்தவர்கள் தென்சாபூர் மற்றும் ஜிம்பரான் கடற்கரை அருகேயுள்ள மருத்துவ மனைகளில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். சாவு எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது. இந்தக் குண்டுத் தாக்குதலை இரண்டு மலேசிய அகதிகள் மேற் கொண்டதாக முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ள்து. கடந்த 2002 ஆம் ஆண்டில் பாலித் தீவில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 202 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது.

## பலஸ்தீனர் மீதான இஸ்ரேலின் தாக்குதலை கண்டித்து அரேபியர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

இரண்டாயிரமாம் ஆண்டில் பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின்போது 13 இஸ்ரேலிய அரேபியர்கள் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. வட இஸ்ரேலிய நகர் ஒன்றில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இஸ்ரேலிய வடபகுதி நகர் ஒன்றில் பலஸ்தீனியர்கள் மீதான இஸ்ரேலிய அரச தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கிருந்த அரேபியர்களால் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடாத்தப்பட்டது. இதன் போது இஸ்ரேலியப் பொலிசார் நடத்திய தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர்.

இவர்களை நினைவுகூரும் நோக்கில் நேற்று உயிரிழந்தவர்களின் கல்லறைகளை நோக்கி ஆயிரக்கணக்கான இஸ்ரேலிய அரேபியர்கள் பேரணியாகச் சென்றனர்.

இதன்போது வீதிகளில் பொலிசாரோ இராணுவத்தினரோ பிரசன்னமாகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இஸ்ரேலிய யூதர்களுக்கும் அரேபியர்களுக்குமிடையில் வேறுபாடுகளைக்காட்ட அந்நாட்டு அரசாங்கம் முயன்று வருவதாகவும் இது அடிப்படை மனித உரிமை மீறல் எனவும் ஆர்ப்பாட்டத்தின் போது கோசம் எழுப்பப்பட்டது. 2000 ஆம் ஆண்டு சம்பவத்தில் தமது சகோதரர்கள் உயிரிழந்தமைக்கு இஸ்ரேலிய அரசாங்கம் பொறுப்பேற்று நீதிவிசாரணை நடத்த முன்வரவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



எல் சல்வடோரில் சான்ட அனா பகுதியில் புகை கக்கும் எரிமலை

## ஆப்கான் எல்லைப் பகுதியில் பாக். இராணுவம் தேடுதல்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஆப்கான் எல்லையை ஒட்டிய பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் நேற்று முன்தினம் பாக் இராணுவத்தினர் அதிரடித் தேடுதல் வேட்டையை நடத்தினர்.

பாகிஸ்தானில் ஆப்கான் எல்லையை ஒட்டிய வடக்கு வாசீஸ்தான் பகுதியில் அல்-ஹைதா மற்றும் தலிபான் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளனர். இவர்களை வேட்டையாட அடிக்கடி பாகிஸ்தான் இராணுவத்தினர் இப்பகுதியில் தேடுதல் வேட்டையை நடத்துவர். கடந்த வெள்ளியன்று இப்பகுதியில் ஒரு இராணுவ மேஜர் உட்பட எட்டு இராணுவத்தினர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். இதையடுத்து அப்பகுதியில் நேற்று முன்தினம் பாக்.இராணுவத்தினர் தீவிர தேடுதல் வேட்டையை மேற்கொண்டனர். தீவிரவாதிகள் பதுங்கியிருந்ததாக கிடைத்த தகவலை அடுத்து தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. விமானப்படையைச்சேர்ந்த இரண்டு விமானங்கள், உலங்கு வானூர்திகள் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளன.

# எமது சூழலை பாதுகாப்பதன் மூலம் சுகதேகிகளாக நாம் வாழமுடியும்

## - கலந்துரையாடலில் க.வே. பாலகுமாரன்



(அலுவலக செய்தியாளர்)

பண்பாட்டு மேம்பாடு என்பது சூழல், தனிநபர் சுகாதாரம், பால் சமத்துவம், சுதந்திரமான வாழ்க்கை தொடர்பான எண்ணக்கரு ஆகியவற்றின் பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது. இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமையன்று கிளி. கரைச்சி பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்ற சூழல் பாதுகாப்பு வாரம் தொடர்பான கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் கலந்து கொண்டு கருத்துரை வழங்குகையில் தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில்; எமது சூழலை பாதுகாப்பதன் மூலமாகவே நாம்பாதுகாப்புடன் சுகதேகிகளாக வாழமுடியும். இன்று கிளிநொச்சியினை உதாரணமாக எடுத்துநோக்குமிடத்து கிளிநொச்சி பிரதேசம் வெப்ப தீவாக மாறிவருவதனை உணரக் கூடியதாகவுள்ளது. ஏனெனில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளமையும், கூரைத்தகடு (அஸ்பஸ்ரோசீற்) பாவனை அதிகரிப்பு என்பனவே முக்கிய காரணியாக அமைந்துள்ளது. இன்று உலக நாடுகளிலே அஸ்பஸ்ரோ கூரைத்தகடு பாவனை முற்றாக தடைசெய்யப் பட்டுள்ளது. காரணம் சூழல் பாதுகாப்பின்மைக்கு இதுவொரு காரணமாகும். எனவே எமது தாயகத்தை தூய்மைப்படுத்துவது, தூய்மையாக வைத்திருப்பதென்பது தாயகத்திலுள்ள ஒவ்வொரு வரது தலையாய கடமையாகும். எனவே எதிர்வரும் ஏழாம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ள சூழல் பாது காப்பு வாரத்தைமுன்னிட்டு சூழல் பாதுகாப்பு முன்னோடி நடவ டிக்கையில் அனைவரும் கலந்து எமது தாயகத்தை தூய்மைப் படுத்ததிடசங்கற்பம் கொள்வோம் என்றார். (சோ)

# விவசாய அபிவிருத்தி நிறுவனம் முல்லை. மாவட்டத்தில் அமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட விவசாய அபிவிருத்தி நிறுவனம் உருவாக்கப்பட்டது. முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா - சுகுமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முல்லை. மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இது தொடர்பான நிகழ்வு நடைபெற்றது.

இதில் இந்த நிறுவனம் அமைக்கும் நோக்கம் தொடர்பாக முல்லை. மாவட்ட விவசாயத்திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் சிவபாதம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் அமிர்தலிங்கம் ஆகியோர் கருத்துக்களை வழங்கினர்.

இந்த நிறுவனம் அமைப்பதற்கான ஒழுங்குகளை முல்லை மாவட்ட விவசாய திணைக்கள பிரதிப்பணிப்பாளர் கோகுல தாசன்,முல்லை. மாவட்ட கமநல திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் சிவலிங்கம், தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

இந்த விவசாய அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவராக வே. இராசையா, செயலாளராக கு.பாலசுப்பிரமணியம், பொருளாளராக சி. தெய்வேந்திரம் ஆகியோர் உட்பட 11 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்தக் கலந்துரையாடலில் முல்லை மாவட்ட அனைத்து விவசா யிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# உலக உளநல நாளை முன்னிட்டு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு

உலக உளநல நாள் எதிர்வரும் ஒக்ரோபர் - 10 உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது. உளநலமும் - ஊடகத்துறையும் என்ற தொனிப்பொருளில் நாளை மதியம் ஒரு மணிக்கு கிளி. கருணா நிலைய மண்டபத்தில் ஊடகவியலாளருடன் கலந்துரையாடல் ஒன்றை கிளிநொச்சி உளநல மருத்துவர் பா.யூடிரமேஸ் ஜெயக்குமார் ஏற்பாடு செய்துள்ளார். இதில் இப்பகுதியைச் சேர்ந்த அனைத்து ஊடகவியலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

# போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோர் மீது காவல்துறையினர் சட்ட நடவடிக்கை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் காவல்பணி.மனையினரால் குற்றத்தடுப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு வருகின் றது. பிரதேசத்தில் அதிகளவு வாகனப்போக்குவரத்து நடைபெற்று வருவதால் விபத்துக்களை தடுக்கும் நோக்கில் வாகனங்களில் அதிகளவு பொருட்கள் ஏற்று தல், சிவப்புக்கொடி கட்டப்படாதிருத்தல், உழவு இயந்திரத் தின் மட்காட்டில் இருத்தல், ஒளி இன்றிபயணிக்கும் சகல வாகனங்களும், வீதிவளைவுச் சமிக்கை (சிக்னல்) போடாது திருப்புதல், மதுபோதையில் வாகனம் செலுத்து தல். இலக்கத்தகடு இன்றிய வாகனம் போன்ற நடவடிக் கைகளில் ஈடுபடுவோர் மீது சட்ட நட்வடிக்கை எடுக்கப்பட்டு குற்றப்பணமும் அறவிடப்பட்டு வருகின்றது.

அத்தோடு கசிப்பு விற்பனையை முற்றாக ஒழிக்கும் நோக்கில் வட்டக்கச்சி காவல்பணிமனையினர் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இரவு நேரங்களில் வீதிரோந்து நடவடிக்கை மூலம் குற்றத்தடுப்பு நடவடிக்கையினை கட்டுப்படுத்தக் கூடிய தாகவுள்ளது என வட்டக்கச்சி காவல்பணிமனையின் உப பொறுப்பாளர் புலேந்திரன் தெரிவித்துள்ளார். (12)

# திருமலையில் புத்தகக் கண்காட்சி

(திருமலை)

சென்னையைச் சேர்ந்த நியூசெஞ்சரி புக் ஹவுஸ் நிறுவனத்தின் மூன்று நாள் புத்தகக்கண்காட்சி முன்னோடி கலை இலக்கிய விமர்சகர் குழுவின் ஆதரவுடன் கிழக்குப் பல்கலைக்கழகத் திருகோணமலை வளாக விரிவுரை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை, ஆரம்பமானது. காலை ஒன்பது மணி தொடக்கம் மாலை ஏழு மணி வரை மூன்று தினங்கள் அதாவது இன்று வரை தமிழ்ப் புத்தகங்களின் க்ண்காட்சியும் விற்பனையும் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். சர்வதேச புத்தகதினம் மற்றும் வாசிப்பு மாதம் ஆகியவற்றை ஒட்டி இப்புத்தகக் கண்காட்சி நடத்தப்படுவதாக முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சகர் குழுவினர் தெரிவித்தனர். தமிழ்நாட்டின் முன்னணிப் படைப்பாளர் மற்றும் பதிப்பாளர்களின் சிறந்த புத்தகங்கள் இக்கண்காட்சியில் பார்வைக்கும் விற்ப்னைக்கும் வைக்கப்பட்டுள்ளன.(25)

# வடக்கு -கிழக்கில் யுத்தத்தால் பாதிப்புற்றுள்ள சுகாதார சேவைகள் சுனாமியால் மேலும் சீரழிவு

## - மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர்

(திருமலை)

இரு தசாப்தகால யுத்தத்தினால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சுகாதார சேவைகள் மிகமோசமாகப் பாதிக் கப்பட்டிருந்தன. கடந்த வருடம் டிசம்பரில் ஏற்பட்ட கடற் கோளினால் சுகாதார மற்றும் வைத்திய சேவைகள் கூடுதலான பாதிப்புக்குள்ளாகியுள்ளன என்று மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் ஈ.ஜி.ஞானகுணாளன், ஐ.நா. சனத்தொகை நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் சுல்தான் அஸிஸ் பங்குபற்றிய மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார்.

மாகாணசுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் இம்மாநாடு செவ்வாய் பிற்பகல் நடைபெற்றது. மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எல்.சி. சிரிவர்த்தனா தலைமை வகித்தார். மாகாண சுகாதார சேவைகள் பணிப்பா ளர் மருத்துவர் வி.குமாரவேற்பிள்ளை மற்றும் ஐ.நா. சனத் தொகை நிதியத்தின் இலங்கைப் பணிப்பாளர் திருமதி லுப்னிபாகி ஆகியோரும் பங்குபற்றினர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் வைத்தியசாலை ஒன்றுள்ளது. கட்டடவசதி கள் உள்ளன. ஆனால் மருத்துவர்கள் மற்றும் ஊழியர் களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது என்றும் மருத்துவர் ஞானகுணாளன் குறிப்பிட்டார்.

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவி யல் பாதிப்புக்களை போக்குவதற்கு மேற்கொள்ளப்படும் உளவியல் செயற்றிட்டம் பற்றி உளவியல் நிபுணர் மருத்துவர் கடம்பநாதன் விபரித்தார். ஐ.நா.சனத்தொகை நிதியப் பணிப்பாளர் சுல்தான் அஸிஸ் திருமலை அரசினர் பொதுவைத்தியசாலைக்கு விஜயம் செய்து, கடற்கோளினால் பாதிக்கப்பட்ட சிறுவர் விடுதியைப் பார்வையிட்டார். பின்னர் மகப்பேற்று விடுதியையும் பார்வையிட்டார். அதன் பின்னர் பணிப்பாளர் சுல்தான் அஸிஸ் கோணேஸ்வராலயத்திற்கு விஜயம்செய்தார்.(25)

# லஞ்சம் பெற்றகுற்றச்சாட்டில் கைதான கிராம சேவையாளருக்கு விளக்க மறியல்

(திருமலை)

லஞ்சம் வாங்கினார் என்ற முறைப் பாட்டின்மீது லஞ்ச விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்ட புல்மோட்டை பிரதேசத்தைச்சேர்ந்த கிராம சேவையாளர் ஒருவரை திருகோண மலை நீதவான் வி.இராமகமலன் ஒக்ரோபர்10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி வியாழக் கிழமை உத்தரவிட்டார்.

சந்தேக நபரை கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் ஒக்ரோபர் 10ஆம் திகதி ஆஜர் செய்யும்படி சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீத வான் மேலும் உத்தரவிட்டார்.

சந்தேக நபர் முதலில் ஒருவரிடம் 1500 ரூபா லஞ்சம் கோரியதாகவும் பணத்தில் ஒரு பகுதியை முதலில் பெற்றுக்கொண்டதாகவும் மிகுதிப் பணத்தை இன்னொரு திகதியில் கோரியதாகவும் அந்தத்திகதியில் லஞ்சத்திணைக் கள அதிகாரிகள் சந்தேக நபரைப் பணம் பெற்றபோது கைது செய்தனர் என்றும் திணைக் கள வட்டாரங்கள் கூறின. (25)

# விலைக்கட்டுப்பாட்டு பகுதியினரால் காலாவதியான பொருட்கள் அழிப்பு!

வட்டக்கச்சி பகுதியில் விலைக் காட்டுப்பாட்டுப் பகுதியினர் தீவிர நடவடிக்கை மூலம் காலாவதியான பொருட்களை கண்டுபிடித்து அழித்து வருகின்றனர். அண்மைக் காலமாக காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுவந்ததை அடுத்து முக்கியமாக குழந்தைகளுக் கான பால்மா வகைகள், கோல்டன் கவ், ஓடிக்கொலோன், பிஸ்கட் வகை கள், பெற்றோலில் எண்ணை கலந் தல் போன்றன வற்றை இனம்கண்டு குற்றப்பணம் அறவிட்டும் அழித் தும் வருகின்றனர்.

அத்தோடு நிறுத்தலவைக் கருவி களுக்கு முத்திரையிடல் விலைப்பட் டியல்இடாது இருத்தல்;பொருட்களை அதிகமான விலையில் விற்றல் போன்ற நடவடிக்கையிலும் மிகவும் கவனம் .செலுத்தி வருகின்றனர்.

அத்தோடு உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு பாக்கு, புகையிலை, வாழைக்குலை, கருவாடு போன்ற பொருட்க[illegible] வரி அறிவிடப்படல் தொடர் [illegible] கருத்துக்களையும் வர்த்த[illegible]க்கும் வியாபாரி களுக் [illegible]ழங்கி வருகின்றனர் பாணி [illegible] என்பனவற்றிலும் மிக வும் [illegible] காட்டி வருவது குறிப் பிடத்த[illegible]கது (12)

# ஒன்று கூடல்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு தேவிபுரம் "ஆ"பகுதி ஊரக மேம்பாட்டு பேரவை தெரிவிற்கான ஒன்றுகூடல் தேவிபுரம் அ.த.க. பாடசாலையில் கிராம அலுவலர் சொக்கலிங்கம் தலைமையில் கடந்த வியாழன் பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமானது.

நிகழ்வில் கருத்துரையை புதுக் குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைத்துணைச் செயலர் சிவராசா, புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப் பாளர் பிறையாளன் ஆகியோர் சமகால அரசியல் கருத்துக்களையும் ஊரக மேம்பாட்டு பேரவையின் செயற் பாடு பற்றியும் வழங்கினர்.

அடுத்து நிர்வாகத்தெரிவில் ஊரக மேம்பாட்டு தலைவராக செ.குணநாத னும்,உபதலைவராக சி.சிறிகாந் தன்,செயலராக இராசேந்திரன் உட்பட 11பேர் தெரிவாகினர். (19,08)

# பழமரக்கன்றுகள் வழங்கல்

வட்டக்கச்சி மாவடிக்கிராமத்தில் இருபது பயனாளிகளுக்கு போரூட் நிறுவனத்தினரால் பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. கிளி/கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் நிர்வாக அலுவலர் புஸ்பகுமாரி தலைமையில் அண்மையில் இவை வழங்கப்பட்டன. இப்பழமரக் கன்றுகள் பராமரிப்பு, அவற்றின் பயன்பாடு பற்றிய கருத்துரைகளை கிளி /கிழக்கு புனர்வாழ்வு உதவிப் பணிப்பாளர் நவநீதன் மற்றும் போரூட் பிரதிநிதி,தலைவர் ஆகியோர் வழங்கினார்கள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மா,பலா,தேசி, தோடை போன்ற சில பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (12)



கிளிநொச்சி கணேசபுரம் கிராம சேவை அலுவலர் தலைமையில் நேற்று கிராம மக்களால் சிரமதானப்பணி மூலம் கிராம அபி விருத்திச்சங்க வளாகத்திலுள்ள பற்றைக்காடுகள் வெட்டி அழிக்கப்படு வதனை படத்தில் காணலாம் . (படம்:- சோதி)

# 75 அகவை நிறைவு காணும் மூத்த பத்திரிகையாளர் கோபு



இன்று ஒரு மூத்த பத்திரிகையாளர் ஒருவர் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக் கிறார் என்றால் அது எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்களையே சுட்டி நிற்கும். இவர் இன்றுள்ள மூத்த பத்திரிகையாளர்களுக்குள் மூத்தவர்.

எஸ்.எம்.ஜி அவர்கள் "வீரகேசரி"யில் தொடங்கி 'ஈழநாடு', 'ஈழமுரசு', 'காலைக்கதிர்',' செய்திக் கதிர்', 'ஈழநாதம்', 'தினக்கதிர்' (மட்டக்களப்பு), 'சுடரொளி' (கொழும்பு), 'நிகரி' (கொழும்பு) ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியுள்ளார். பத்திரிகையையே தன் வாழ்வாக்கிக் கொண்ட கோபு பத்திரிகைப்பணியில் ஐம்பத்திரண்டு ஆண்டுகளைக் கடந்து உடல் சற்றுத்தளர்ந்த போதிலும் இன்றும் உளம் தளராமல் உற்சாகத்துடன் தொடர்ந்து பத்திரிகைப் பணியாற்றி வருகிறார். இம் மூத்த பத்திரிக்கையாளர் கோபு இன்று தமது எழுபத்தி ஐந்து வயதை நிறைவு செய்து பவளவிழாக் காண்கிறார்.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் வீரகேசரியில் தன்னை இனைத்துக் கொண்டார். 1960 இன் நடுப்பகுதியில வீரகேசரி ஊழியர் வேலைநிறுத்தமும், அதனைத் தொடர்ந்து நிர்வாகம் கதவடைப்புச் செய்ததும் கோபு என்ற கோபாலரத்தினமும் 'ஈழநாடு'வில் வந்து சேர்வதற்குக் காரணமாக இருந்தது. கோபுவின் இளமையும், துடிப்பும், திறமையும் 'ஈழநாடு' இதழுக்கு உரமானது. 'ஈழநாடு' தினப்பத்திரிகையை உருவாக்கி வளர்த்தார்.

ஈழநாடு பத்திரிகையைக் கட்டியெழுப்பிய பெருமையில் பெரும் பகுதி கோபுவையே சாரும் கோபு உணவை மறந்து, உறக்கத்தை மறந்து சில சமயங்களில் தன் வீட்டையே மறந்து, ஈழநாடு பத்திரிகைக்காக உழைத்தவர். அரசியல் மற்றும் சமூக இடர்பாடுகளையெல்லாம் தைரியமாக ஊடறுத்து பத்திரிகையின் இலட்சியத்துக்காக உழைத்தவர். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக்குரல் கொத்தவர் தமிழ் மக்களை விடுதலைக்காகத் தட்டி எழுப்பியதிலும் கோபுவுக்குப் பெரும்பங்குண்டு. தமிழீழத்தின் முதல் தினப்பத்திரிகையாளர் கோபு எனபதே சரி!

கோபுவிடம் பத்திரிகைப் பயிற்சி பெற்றவர்கள் பலர் இன்று மேலை நாடுகளிலும், நமது நாட்டிலும் பத்திரிகைத் துறையில் துலங்கிக் கொண்டிருக்கிறார்கள் .கோபுவின் அரைநூற்றாண்டுப்பத்திரிகைப் பணியைப் பாராட்டி நமது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்கள் கடந்த வருடம் 2004 ஜுன் மாதம் 4ஆம் திகதி தேசியச்சின்னம் பொறித்த தங்கப் பதக்கம் வழங்கிப் பாராட்டியதுடன் விருந்துமளித்துக் கௌரவித்தார். கோபு இதழியலாளராக மட்டும் நின்று விடவில்லை. சிறிரங்கன் என்ற பெயரில் பல சிறுகதை களையும் எழுதியுள்ளார். எஸ். எம்.ஜி.,பாலரத்தினம் ஊர்சுற்றி எனப் பலபெயர்களில் எழுதுகிறார். திரைவிமர்சனம், இசை விமர்சனம், நூல் விமர்சனம் என்று ஆய்வுத்துறைகளும் அரசியல் ஆய்வுக்கட்டுரைகளும், பொதுக் கட்டுரைகளும் ஆயிரக்கணக்கில் எழுதியுள்ளார். இவை அவருக்கு கைவந்தவையாகும். ஈழ மண்ணில் ஓர் இந்தியச்சிறை, அந்த ஒரு உயிர்தானா உயிர் பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு ஆகிய நூல்களையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

03.10.1930 யாழ்ப்பாணம், கன்னாதிட்டியில் பிறந்து பெ ருமாள் கோவிலடியில் வளர்ந்து, வாழ்ந்த திரு.கோபாலரத்தினம் தமது ஆரம்பக்கல்வியை யாழ். சன் மார்க்க போதனா துவிபாஷா பாடசாலையிலும், பின்னர் ராமகிஷ்ண மிஷன் யாழ். வைத்தீஸ்வராக கல்லூரியிலும் கற்றார். மட்டக்களப்பு ராமகிஷ்ணமிஷன், சிவாநந்தா வித்தியாலயத்திலும் சில மாதங்கள் உயர்வகுப்பில் படித்தார்.

சுவாமி நடராஜானந்தா யாழ்ப்பாணம் வந்த சமயங்களில் தொண்டு செய்யும் பாக்கியமும் பெற்றார்.

2002,2004ஆம் ஆண்டுகளில் ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன் முதலிய ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று திரும்பிய கோபு அங்கு எழுத்தாளர் சங்கங்களில் வரவேற்பையும் பெற்றார். கடந்தவருடம் ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் இவருக்கு அளித்த வரவேற்புபசாரத்தில் " ஊடகச்செல்வர்" என்ற பட்டமும் வழங்கிக்கௌரவித்தது.

— பேனா

-சர்வதேச நல்லொழுக்கத்தினை முன்னிட்டு-

# வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நோயாளருக்கு உணவுப் பொருட்கள் வழங்கல்

(வலிகாமம்)

சர்வதேச நல்லொழுக்கத்தினமான எதிர் இன்று வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் புற்றுநோயாளர்களுக்கு உணவுப்பொருட்களை வழங்கவுள்ளது.

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் வைத்து பால்மா, சீனி,பிஸ்கட் உட்பட பலவகையான உணவுப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் தலைவர் சி.இராசலிங்கம், செயலாளர் செ. குமாரசிங்கம் உட்பட சம்மேளன அங்கத்தவர்கள் பலரும் கலந்துகொண்டு இவ் உணவுப்பொருட்களை வழங்க இருப்பதாக சம்மேளனத்தின் செயலாளர் செ.குமாரசிங்கம் தெரிவித்தார். (37)

# பருத்தித்துறையில் பூசகர் வீட்டில் 50 பவுண் தங்க நகை திருட்டு

(வடமராட்சி)

நள்ளிரவு வேளை சமையலறையின் ஓட்டைப்பிரித்து உள் இறங்கிய திருடர்கள் பல இலட்சம் பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

புலோலி பெருந்தெருவிலுள்ள புற்றளை முருகன் ஆலய பூசகர் யோ.நாகேஸ்வரசர்மா என்பவரது விட்டினுள்ளேயே திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளை வீட்டின் பூஜை அறை பெட்டகத்துள் வைக்கப்பட்டிருந்த இருபது பவுண் தாலிக்கொடி உட்பட முப்பது பவுண் பெறுமதி வாய்ந்த நகைகளையும் நாற்பதாயிரம் ரூபா ரொக்கப்பணம் திருடர்களால் சூறையாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த25 ஆம் திகதிஞாயிறு இரவு நிகழ்ந்துள்ளது. இது தொடர் பாக பருத்தித்துறை சிறிலங்காப் பொலிசாரிடம் புகார் செய்யப்பட்ட தனையடுத்து அங்கு விரைந்த பொலிசார் சம்பவம் தொடர்பான அடையாள தன்மைகளை பதிவு செய்து சென்றுள்ளனர்.

(கா)

# பனம் பழம் பொறுக்கச் சென்ற பெண்மணி பாம்பு தீண்டி மரணம்

(அல்வாய்)

அதிகாலை வேளையில் பனங்காணி ஒன்றுக்குள் பனம் பழம் பொறுக்கச்சென்ற குடும்பப்பெண் மணி பாம்புக்கடிக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

அல்வாய் வடக்கைச்சேர்ந்த திருமதி.கனகரத்தினம் சரோஜாதேவி (வயது-46) என்னும் குடும்பப்பெண் மணியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் கடந்த 25ஆம் திகதி அதிகாலை 4.30 மணியளவில் இடம் பெற்றது.

சிலமணி நேரத்தில் அப்பனைமர வளாகத்துள் பனை மரம் ஒன்றில் சீவல் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சீவல் தொழிலாளியே பெண் மணியின் சடலத்தைக்கண்டு உறவினர்களுக்கு தகவல் கொடுத்துள்ளத்னையடுத்து இவரது சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பருத்தித் துறை பதில் நீதவான் ந.தங்கராஜா மரணவிசாரணையை மேற்கொண்டு உத்தரவிட்டதையடுத்து மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை மேற் கொண்டு அறிக்கை சமர்ப்பித்தார்.

பாம்பு தீண்டியதில் விசம் தலைக்கேறி மரணம் சம்பவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(கா)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை பிழை என்பதை பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு உணர்த்தியுள்ளது

### தொழிலாளர் தேசிய சங்கம் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் மீது பயணத்தடையை விதித்தமையானது பிழையான காரியம் என ஐரோப்பிய ஒன்றியம் உணர்ந்து கொள்ள பொங்குதமிழ் மற்றும் தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வு என்பன வழிவகுத்துள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட பொங்குதமிழ் மற்றும் மன்னாரில் நடத்தப்பட்ட தமிழ் எழுச்சி நிகழ்வு என்பன ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீது பயணத்தடையை விதித்த காலக்கட்டத்திலேயே நிகழ்த்தப்பட்டன.

இவை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியே மேற்கொள்ளப்பட்டவையாகும்.

இதில் பங்குகொண்டோரின் உணர்வுகளை ஐரோப்பிய ஒன்றியம் புரிந்துகொள்ளுமானால் தாம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக எடுத்த நடவடிக்கை தவறானது என்பதை ஏற்றுக்கொள் ளும்.

1956 ஆம் ஆண்டும் 1958 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளிலும் அரச பயங்கரவாதத்தின் துணையுடன் தமிழ் மக்களின் உயிர்களும் உடமைகளும் நாசமாக்கப்பட்ட போதும் யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்டபோதும் அது தொடர்பில் ஐரோப்பிய நாடுகள் என்ன நடவடிக்கையை எடுத்தன?

தமிழ் மக்களின் நலன் தொடர்பில் அந்த நாடுகள் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை 1948 ஆம் ஆண்டுக்கு முன்னரேயே தீர்க்காத வரலாற்றுத் தவறுக்கு காரணமான பிரித்தானியாவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய தீர்மானத்திற்கு துணைபோயுள்ளமையானது. மீண்டும் ஒரு முறை இலங்கையின் பேரினவாதிகளுக்கு ஊக்கம் அளிக்கும் செயற்பாடாகவே கருதவேண்டி யுள்ளதாக எஸ்.எ.கந்தசாமி சுட்டிக் காட்டியுள்ளார். (32)

## விண்ணப்பம் கோரல்

வடமராட்சி பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பதவிக்கும் கரணவாய் வேதாரணியேஸ்வராவித்தியாலய அதிபர் பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கோட்டக்கல்வி அதிகாரி பதவிக்கு அதிபர் தரம் ஒன்று(1) இலங்கை கல்வி நிர்வாக பரீட்சையில் சித்தியடைந்தவர்களும், வித்தியாலய அதிபர் பதவிக்கு அதிபர் தரம் ஒன்று (01), 2-1இல் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வி.செல்வராசா அறிவித்துள்ளார். (கா)

# மனித உரிமை மீறல் தொடர்பாக பொலிஸ் அதிகாரிகள் பணி நீக்கம்

### பொலிஸ் பணி முடங்குமென எச்சரிக்கிறார் பொலிஸ் மா அதிபர்

மனிதஉரிமை மீறல் தொடர்பாக சிறிலங்கா பொலிஸ் அதிகா[ரிக]ள் பணிநீக்கம் செய்யப்படுவதால் பொலிஸ் திணைக்களத்தின் பணிகள் முடங்கியுள்ளன.

மனிதஉரிமை மீறலில் தொடர்புடைய 108 அதிகாரிகளையும் உடனடியாக பணி நீக்கம் செய்யுமாறு பொலிஸ் ஆணைக்குழு உத்தவிட்டுள்ளது இதுவரை இந்த 108 பேரில் 55 பேர் பணி நீக்கத்திற்கு இலக்காகியுள்ளனர். ஏனைய அதிகாரிகள் வரும் நாட்களில் பணி நீக்கம் செய்யப்பட வுள்ளனர்.

இந்த அதிகாரிகளுக்கெதிராக இருக்கும் வழக்குகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் மாத்திரம் அவர்களுக்கு தண்டனையாக பணி நீக்கம் செய்வது நியாயமாக இருக்கும் என்றும் அப்படியில்லாமல் அவர்கள குற்றவாளிகளென உறுதிப்படுத்துவதற்கு முன்னரே அவர்களைப் பணி நீக்கம் செய்வது நியாயமற்றது என்றும் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இதனால் பொலிஸ் திணைக்கள செயற்பாடுகள் முடங்கும் நிலை ஏற்படக்கூடும் என்றும் சந்திரா பெர்னாண்டோ கூறினார்.

திணைக்களத்தின் செயற்பாடுகள் தடைப்படுமாயின் எதிர்வரும் தேர்தலை அமைதியாகவும் நேர்மையாகவும் நடத்துவதற்கு நெருக்கடிகள் ஏற்படலாம் என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

குற்றத்தடுப்பிற்கு எதிரான சில மனித உரிமை அமைப்புக்கள் மிகத்திட்டமிட்ட வகையில் இந்த அதிகாரிகளைப் பணி நீக்கம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் சந்திரா பெர்னாண்டோ மேலும் கூறினார்.

# 2006 வரவு- செலவுத்திட்டத்தில் நிவாரண அறிவிப்பு இருக்கா

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்படவுள்ள 2006 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத்திட்டம் நிவாரண வரவுசெலவுத்திட்டமாக அமையவாய்ப்பில்லை என்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.தமது பொருளாதார உதவிகளை இலங்கை அரசாங்கம் உரிய வகையில் பயன்படுத்தவில்லை என அண்மையில் உலக வங்கிகுற்றம் சுமத்தியிருந்தது.எரிபொருளின் விலையேற்றத்தின் அடிப்படையிலேயே எதிர்வரும் வரவு செலவுத் திட்டம் அமையுமென நிதி அமைச்சர் சரத் அமுனுகம நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்திருந்தார்.

# தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் விவசாயிகளுக்கு நிவாரணம்

### ஐ.தே.க கூறுகின்றது

சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் விவசாயிகளுக்கு பல நிவாரணங்களை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸஅத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் உற்பத்தி செய்யும் நெல்லை உத்தரவாத விலையில் கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார். தற்போதைய அரசாங்கம் விவசாயிகளின் நெல்லைக் கொள்வனவு செய்ய எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரிவித்த அவர் விவசாயிகள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதோடு உயிரை மாய்த்துக் கொள்ளும் நிலைக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆமைக்கும் முயலுக்கும் இடையில் ஓட்டப்பந்தயம் நடைபெற்றதாக கதைகளில் கூறப்படுகிறது. அப்பந்தயத்தில் முயல் ஆமையை இலகுவில் வென்றுவிடலாம் என எண்ணி ஆமை ஓடட்டும் என்று சற்று நித்திரை கொண்டது. பின்னர் எழும்பிப் பார்த்த போது ஆமை வெற்றி இலக்கை அடைந்துவிட்டிருந்தது.

அதேபோலவே கதையில் கூறப்படும் முயல் போன்ற பாத்திரமே தற்போது ரணில் விக்கிரம


ரணில்

சிங்கவின் நிலைப்பாடா கவுள்ளது. காரணம் நடந்து முடிந்த தேர்தல்களில் அவர் நடந்து கொண்ட விதம் அதனையே விளக்குகின்றது. ஆனால் இந்த முறையும் அவர் அவ்வாறே செயற்படுவாரா? என்

மக்களின் வெறுப் புக்குள்ளாகியுள்ள நிலையில் ரணில் சில வேளை வெற்றி பெறலாம். யார் என்ன நினைத் தாலும் சொன்னாலும் ஜாதிகஹெல உறுமய மகிந்தவுக்கு ஆதரவளித்தால் ரணிலுக்கு சுமார் நான்கு இலட்சம் வாக்குகள் கிடைக்காது விடலாம்.

ஆனால் தற்போது ஹெல உறுமய பிளவுபட்டுள்ளதால் அது சாத்தியமாகுமா என்பதைக் கூறமுடியாது. ஹெலஉறுமய 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு ஒருவரை பாராளு மன்றுக்கு அனுப்பியது. ஆனால் கட்சியில யாருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவது என்ற கருத்து முரண்பாட்டால் கட்சி பிளவுபட்டது. பின்னர் 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் கிடைத்த பாராளுமனற உறுப்புரிமை கூடக் கிடைக்க

வில்லை. அப்போது அக்கட்சி பெற்றது 50 ஆயிரத்து 665 வாக்குகள் மட்டுமே. அதிலிருந்து அதன் செல்வாக்கை அறிய முடிந்தது.

கட்சி தெரிவிப்பினும் இவ்வாறான நிலையிலேயே 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சியை விட அதிகமாக வாக்குகளைப் பெற்றதாக ஜே.வி.பி தெரிவிக்கின்றன. அதுவும் உண்மையே.

2001 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பு ஜே.வி.பி சுதந்திரக்கட்சி மூன்று மாதங்களாக கூட்டாட்சியொன்றையே நடத்தி வந்தன. அடுத்து ஜே.வி.பி அமைச்சுப் பதவிகளைத் ஏற்காது செயற்பட்டதால் மக்களின் ஆதரவையும் பெற்றிருந்தது. ஆனால் இன்றைய நிலையில் ஜே.வி.பி அமைச்சு பதவிகளை ஏற்று அதனால் கருத்து முரண்பாடுகளுக்குள்ளாகி மக்களின் ஆதரவையும் இழந்துள்ளது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அன்று இருந்த நிலையிலேயே இன்று இருக்கிறது. அதனால் அன்று பெற்றுக் கொண்ட வாக்குகளை இன்று பெறமுடியாது என்று ஐ.தே.கட்சி வாதிடலாம்.

எனினும் 2001 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி இணைந்து பெற்ற வாக்குகளை விட 2004 ஆம் ஆண்டு 77802 வாக்குகளை அக்கட்சிஅதிகமாகப் பெற்றதால் ஐ.தே.கட்சியின் வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

உறுப்பினர்கள் ஐ.தே.கட்சியில் இணைந்த தருணத்திலேயே பொதுத்தேர்தலை சந்தித்தது. அப்போது அக்கட்சி பலமிழந்த கட்சியாகவே காணப்பட் டது. இன்றும் அவ்வாறான நிலையிலேயே உள்ளது. இன்று மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் போராட்டத்தை நடத்துவது கட்சியின் தலைவியான சந்திரிகாவினதும் பிரதமர் வேட்பாளரான அநுராவின் விமர்சனங்களுக்கும் மத்தியிலாகும்.



மகிந்த

அந்தவகையில் சுதந்திரக் கட்சிக்கு போதிய வாக்குகள் கிடைக்குமோ? எனற அங்கலாய்ப்பும் அவர்களிடம் காணப்படுவதாகவே தெரிகிறது. ஆனால் 2001 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற வாக்குகள் தமக்குக் கிடைக்கும் என்ற ஊக் கமும் அவர்களிடம் காணப்படுகிறது. அதாவது அப்போது அவர்களுக்கு கிடைத்ததுடன். (சுதந்திரக்

டன் ஒப்பிட்டால் ரணில் முன்னிலையில் இருப்பார். ஆனால் மகிந்தவுக்கு ஹெல உறுமயவின் 5,52, 724 வாக்குகளும் கிடைத்து விட்டால் மகிந்தவுக்கு 47,21,010 வாக்குகள் கிடைத்துவிடும்.

ஆயினும் ஐ.தே.கட்சி உறுப் பினர் ஒருவர் 2001 ஆம் ஆண்டைவிட 2004 ஆம் ஆண்டு தமிழ்க் கட்சிமைப்புக்கு வாக்களித்தோர் தம் முன் இணைந்து கொண் டால் அந்த வாக்குகள் தமக்கே கிடைக் கும். எனவே ஐ.தே. கட்சி மொத்தமாக 48,25,206 வாக்குகளைப் பெற்று மகிந்தவைவிட 10,4196 வாக்குகள் முன் னிலையில் இருக்கு

# சனாதிபதித் தேர்தலில் தெளிவற்ற நிலை!




பதை இப்போது கூறமுடியாது.

எனினும் தொண்டமானினதும் ரவூப் ஹக்கீமினதும் தமிழர் தேசிய கூட்டணியினதும் வாக்குகள் தமக்கே வந்தடையும் என ரணில் எண்ணிக்கொண்டிருப்பதால் ரணிலை மகிந்த ராஜபக்ஷ வெற்றி கொள்வதும் சுலபமான காரியமாக இருக்க முடியாது. அத்துடன் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியில் இருப்பதாலும் சுமார் ஒன்றரை வருட ஆட்சியினால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி கூட்டணி

அதனால் 2001 ஆம் ஆண்டு ஹெல உறுமயவுக்கு நடந்த கதி தான் இப்போதும் நடக்கும் என ஐக்கிய தேசியக் கட்சி நினைக்கலாம். ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணியின் கருத்து வேறு மாதிரியானவையாகும்.

2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அவை பெற்ற வாக்குகள் தற்போது கிடைக்காது என்றும், இரண்டு வருடம் ஆட்சியிலிருந்து மக்களின் வெறுப்புக்குள்ளா கியிருப்பதாகவும் ஐ.தே.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அல்லது பொதுஜனஐக்கிய முன்னணி என்று கூறப்படும் கட்சி 1994 ஆம் ஆண்டு முதல் 2001 வரை ஆட்சியிலிருந்து மக்களின் அதிருப்திக்குள்ளாகியிருந்தது. பின்னர் ஜே.வி.பி யுடன் இணைந்தும் தற்போது கூட்டணி அமைத்துக்கொண்டும் ஆட்சி நடத்தி மக்களின் வெறுப்புக்குள்ளாகியே இருக்கின்றது.

அதேவேளை கூட்டணி 2001 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியின் செய லாளர் உட்பட பல முக்கிய

கட்சி ஜே.வி.பி யுடன் இணைந்து போது தனித்து பெற்றது பேரியல் அஷ்ரப்பின் ஆதரவாளர்களின் வாக்குகளும் சமசமாஜக் கட்சி கம்யூ னிஸ்ட், மக்கள் கட்சி என்பவற்றின் வாக்குகளும் உள்ளடங்கும்) தற்போது ஈ.பி.டி.பி, ஹெல உறுமய கட்சி என்பவற்றின் வாக்குகளும் உள்ளடக்கினால் மகிந்த வுக்கு கிடைக்கும் மொத்த வாக்கு கள் 42,18,951 ஆகலாம்.

2001 ஆம் ஆண்டு ரணிலுக்கு கிடைத்த மொத்தவாக்குகள் 40,86,206 ஆகும். இதில் மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சிகளின் வாக்குகளும் அடங்கும்.132795 ஆயினும் இந்தத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் புளொட், தமிழர் கூட்டணி ஆகியன ஆதரவு வழங்கினால் அவருக்கு 45,56,367 வாக்குகள் கிடைக்க லாம். அப்படியாயின் மகிந்தவை விட ரணில் 3,37,416 வாக்குகள் முன்னிலையில் இருப்பார்.

எனினும் 2001 ஆம் ஆண்டு தேர்தலை இப்போதைய தேர்தலு

மென எண்ணுவார்.

எவ்வாறாயினும் தற்போதைய தேர்தல் களநிலவரம் ஒருவரின் அனுமானத்துக் கேற்ப நடந்துவிட முடியாது.

காரணம் கடந்த காலத்தேர்தல்களின்போது ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தான் இலகுவாக வெற்றிபெற்றுவிடலாம் என எண்ணி பெரிதாக வாக்குறுதிகளிலும் பிரச்சார நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல்

**உப்புள் ஜோசப் பர்னாந்து(லங்காதீப) தமிழில் வடிவேல்**

இருந்தார். காரணம் மக்கள் எப்போதும் யுத்தத்தை விரும்பமாட்டார்கள். சமாதானம் விரும்புவோர் தமக்கே வாக்களிப்பர் என அவர் நம்பினார். எனினும் கடந்த பொதுத் தேர்தலில் அவரை மக்கள் பெரிதாக ஆதரிக்கவில்லை. அவர்அதே பாணியில் தற்போதும் செயற்படுவாராயின் மகிந்த சனாதிபதியாவதை அவரால் தடுக்க முடியாது.

## பருப்பையும் நெத்தலியையும் மக்களுக்கு கொடுத்துவிட்டு புலிகளுக்கு ஈழத்தை வழங்குவதே ஐ.தே.க வின் நோக்கம்

### – ஜாதிக ஹெல உறுமய தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

பொதுமக்களுக்கு பருப்பையும், நெத்தலியையும் காட்டி ஏமாற்றிவிட்டு விடுதலைப் புலிகளுக்கு ஈழத்தை வழங்குவதே ஐக்கியதேசியக் கட்சியின் நோக்கம். அந்த நோக்கம் ஐ.தே.க.வின் தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் தெட்டத்தெளிவாக வெளிப்படுகின்றது என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்ததேரர் தெரிவித்தார். விடுதலைப் புலிகளினால் நிராகரிக்கப்பட்ட ஒஸ்லோ, டோக்கியோ பிரகடனத்தை ஐக்கிய தேசியக்கட்சி தனது தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கியிருப்பது வெறும் கண்துடைப்பு என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வியாழன் கொழும்பில் இடம்பெற்ற அக்கட்சியின் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது; ரணில்விக்கிரமசிங்கவின் தேர்தல் கொள்கைப் பிரகடனம் நாட்டின் பிரிவினைக்கே வழிவகுக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப்புலிகளுக்கு ஈழத்தை தாரை வார்க்க மேற்கொள்ளும் சதித்திட்டங்கள் இந்தத் தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நெஸ்பிரே, அங்கர்மாவை மக்களுக்கு குடிக்கக் கொடுத்து ஏமாற்றிவிட்டு சீனி, நெத்தலி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களை விலை குறைத்து வழங்கிவிட்டு விடுதலைப் புலிகளுக்கு தேவையான ஈழத்தை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கின்றது. சனாதிபதி வேட்பாளர்கள் இருவருடனும் நாம் பேச்சுவார்த்தை நடத்தினோம் இதன்படி ரணில் தலைமையில், நாடு பிளவுபடுவது உறுதி என்பதை நாம் உணர்ந்து கொண்டோம் என்றார்.

## பொ.ஐ முன்னணி காலத்தில் 60 ஆயிரம் அரசியல் பழிவாங்கல்கள்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிப்பொறுப்பை ஏற்றதிலிருந்து சுமார் 60 ஆயிரம் பேர் வரை அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாகியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச்செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.


இவர்களுக்கு தமது வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியாக பதவியேற்றவுடன் உரிய நிவாரணங்கள் வழங்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார். உடுதும்பரையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.இதேவேளை நாட்டிலுள்ள பெரும்பாலான பொலிஸ்துறைமையங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் பதவியில் அமர்த்தப்பட்ட பொறுப்பதிகாரிகளே இருப்பதால் தேர்தல் காலத்தில் அத்துமீறல்களுக்கு இடம்முள்ளதாக நீதியமைச்சர் டபிள்யு டி ஜே செனவிரட்ன தெரிவித்துள்ளார். எனவே தேர்தல் அதிகாரிகள் இதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென கோரியுள்ளார்.(32)

# பன்னங்கண்டி வாழ் மக்களின் துயர் போக்க முன்வருக!

கிளிநொச்சி பன்னங்கண்டி பிரதான வீதியில் அமைந்துள்ள பாலம் முற்றாக சேதமடைந்துள்ளமையின் காரணமாக பன்னங்கண்டி கிராமமக்கள் முதல் அதனை அண்டிய கிராம மக்கள் அனைவரும் போக்குவரத்துக்களை மேற்கொள்வதில் சொல்லொன்னாத்துன்பதுயரங்களைத் தினம்தினம் அனுபவித்து வருகின்றனர்.

பன்னங்கண்டி கிராமமானது நாலாபக்கமும் வயல்நிலங்களால் சூழப்பெற்ற கிராமமென்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய தொன்றாகும். மேற்படி கிராமத்தில் 365 விவசாயக்குடும்பங்கள் வசித்து வருகின்றன. பன்னங்கண்டி சுந்தரராஜன் வளர்ச்சிக் குடியேற்றத்திட்டத்தில் மட்டும் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அத்துடன் விவசாயப் பண்ணை (தென்னை) பன்னங்கண்டி சந்திக்கருகாமையிலே அமைந்துள்ளது. மேற்படிக்கிராமத்திலுள்ள அனைவரின் பிரதான பாதையாக இந்த பன்னங்கண்டி-கராட்டிபோக்கு வீதியே அமைந்துள்ளது.

1996ஆம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கையின் போது சிறிலங்கா இராணுவத்தினரால் தகர்க்கப்பட்ட மேற்படி பாலமானது கிளிநொச்சியில் மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்த வேளையில் தற்காலிகமாக பனைமரக்குற்றிகளாலும், பின்பு



இரண்டு தண்டவாளக்கம்பிகளில் சிலிப்பர் கட்டைகளைப் பதித்து இது வரைகாலமும் இக்கிராமமக்கள் இப்பாலத்தினூடாகவே பயணத்தினை மேற்கொண்டு வந்தனர். தற்போது மேற்படி பாலம் முற்றாக சேதமடைந்துள்ளமையின் காரணமாக எதுவித மாற்று வழியும் இல்லாத நிலையில் பாலத்தின் அருகிலுள்ள வயல்பரப்பினூடாகவே மக்கள் தங்கள் போக்குவரத்தினை மேற்கொண்டு வருகின்றனர். மாரிகாலம் ஆரம்பமாக உள்ளமையின் காரணமாகவும் காலபோக நெற்செய்கை ஆரம்பமாக உள்ளமையினாலும் வயல்பரப்பினூடாக மேற்கொள்ளப் பட்டுவரும் போக்குவரத்து தடைப்படுமிடத்து இப்பகுதி மக்கள் பலகிலோ மீற்றர் தூரம் சுற்றியே தங்கள் முக்கிய அலுவல்களை மேற்கொள்ளும் பொருட்டு கிளிநொச்சி நகருக்கு வரவேண்டிய ஏது நிலை உருவாகும்.

இது விடயம் தொடர்பாக பன்னங்கண்டி கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களுடன் தொடர்புகொண்டு பாலம்புனரமைப்பு சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளீர்களா என்று வினவியபோது ;

பன்னங்கண்டியில் மக்கள் மீளக்குடியமர்ந்ததன் பிற்பாடு பாலம் சம்பந்தமாக சகல தரப்பினருடனும் தொடர்புகொண்டு எதுவிதபலனும் கிட்டாத நிலையில் இப்பகுதி மக்களின் துணையுடன் தற்காலிகமாக இருதடவைகள் இப்பாலத்தினை புனரமைத்து பயணத்தினை மேற்கொண்டு வந்தோம். கடந்த வருடம் பெய்தபெருமழைகாரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் மீண்டும் மேற்படி பாலம் சேதத்திற்குள்ளானது. அதன்பிற்பாடு இரண்டு தண்டவாளக் கம்பிகளுடன் இந்த தற்காலிக பாதைதிருத்த வேலையினை மேற்கொண்ட பொழுதிலும் வாகனபோக்குவரத்துக்கள் மேற்கொள்ள முடியாத நிலையியே காணப்பட்டது. ஆயினும் இப்பாலத்தினூடாகவே பயணங்கள் மேற் கொள்ளப்பட்டுவந்தன. கடந்தவாரம் இப்பாலத்தினூடாக பய ணிக்க எத்தனித்த பாரவூர்தியொன்று தடம்புரண்டதின் விளை வாக பாரவூர்தி சேதத்திற்குள்ளானதுடன், தற்காலிகமாக அமைக் கப்பட்ட மேற்படி பாலமும் சேதமடைந்தது. இதன் காரணமாக ஈருருளிகள், உந்துருளிகள் யாவும் வயல்வெளியூடாகவே தற்போது பயணங்களை மேற்கொண்டு வருகின்றன.



கவலை தெரிவித்துள்ளதுடன் பாலம் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்குபோலாகிவிட்டதென்றனர். அத்துடன் பன்னங்கண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை வீதியின் அருகாமையாக வயற்பிரதேசத்தில் அமைந்துள்ள நிலையில் பாடசாலை நுழைவாயில் கூட சிதைந்த நிலையிலுள்ள ஒரு நீர்போக்கியின் மேலாலேயே

பன்னங்கண்டி பாலத்தின் முக்கியத்துவம் குறித்தும் பாடசாலை மாணவர்கள் முதல் வைத்தியசாலை செல்லும் நோயாளர்கள் மற்றும் விவசாய உள்ளீடுகளைச் சந்தைக்கு எடுத்துச் செல்ல விவசாயிகள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் குறித்து



சம்பந்தப்பட்ட சகல திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்திய பொழுதிலும் நாலு வருடகாலமாக எதுவித முன்நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென

பாடசாலை மாணவர்கள் முதல் ஆசிரியர்கள் வரை பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளதெனவும் மழை வெள்ளம் வரும் பொழுது மாணவர்கள் நீர்ப்போக்கி தெரியாத நிலையில் விழுந்து எழும்பி செல்லும் நிலைதொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றதெனவும், சுருக்கமாகக் கூறின் கடந்த நாலு வருடங்களாக பன்னங்கண்டி வாழ் மக்கள் போக்குவரத்து முதல் சகல வழிகளிலும் துன்பதுயரங்களை எதிர்கொண்ட வண்ணமே உள்ளனரேயொழிய எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லையெனவும் தெரிவித்தனர்.

பன்னங்கண்டி பாலத்தினூடாக முரசுமோட்டை, வட்டக்கச்சி கிராமங்களின் ஒருபகுதி மக்கள் பன்னங்கண்டி சிராமத்தினூடகவே பயணத்தினை மேற்கொண்டுவருகின்றனர். மேற்படி பாலம் அவசர மாக புனரமைக்கப்படாவிடின் எதிர்வரும் மாரிகாலத்தில் இப் பாதையூடாகப் பயணிப்பது தடைப்படுவது உண்மையென்பதுடன் இப்பகுதி மக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக வுள்ளனர். என்பது திண்ணம்.இந் நிலையில் மக்களின் எதிர்பார்க்கை இம் மாரியின் முன்பாவது இதற்கு ஓர் தீர்வு வருமா என்பதே.

**கனகபுரச்சோதி**

---



## கடந்த வாரத்தில்

## 22.09.2005 28.09.2005

**22**

☐ மெக்சிக்கோ நாட்டில் உலங்கு வானூர்தி ஒன்று விழுந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த அந்நாட்டு அமைச்சர் ஒருவர் உட்பட எட்டுப் பேர் பலி.

☐பாகிஸ்தானின் லாகூரிலுள்ள மினார் பாகிஸ்தான் நினைவுச்சின்னம் அருகே நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியிலும் மத்திய மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடத்திலும் இரு குண்டுகள் வெடித்ததில் ஆறுபேர் பலி, 40பேர் படுகாயம்.


**23**

☐காஸாப்பகுதியில் ஜபாலியா அகதிகள் முகாம் அருகே பலஸ்தீன ஹமாஸ் தீவிரவாதிகள் ஊர்வலம் நடத்திய வேளை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 19பேர் பலி, 80 பேர் காயம்.



☐ நியூயோர்க்கிலுள்ள ரொட்டிக்கடையில் காசாளராகப் பணியாற்றிய இந்தியர் ஒருவர் அடையாளந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை.

☐ அமெரிக்காவில் ஹீஸ்டன் நகரின் புற நகர்ப்பகுதியான தல்லாஸ் என்ற இடத்தில் "ரீற்றா" சூறாவளிக்கு அஞ்சி மக்கள் வெளியேறிக்கொண்டிருந்தபோது பேருந்து ஒன்று தீப்பிடித்து எரிந்ததில் 20 பேர் பலி.



**24**

☐ ஈராக்கிற்கு அமெரிக்கப் படைகள் அனுப்பப்படுவதற்கும் பூகோளமயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சுமார் ஒரு இலட்சம் பேர் வோஷிங்டனில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

☐அமெரிக்காவின் நியூஓர்லியன்ஸ் பகுதியை ரீற்றா சூறாவளி தாக்கியது. இதன போது 30அடி உயரமான தடுப்புசுவரைத்தாண்டி நியூஓர்லியன்ஸ் நகருக்குள் கடல்நீர் உட்புகுந்தது. டெக்சாஸ்மாநிலத்திலிருந்து 13 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப் பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டனர். பல்லாயிரம் வீடுகள் சேதம்.




**25**

☐பலஸ்தீனத்தின் காஸாமுனைப்பகுதியில் இஸ்ரேலியப்படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஒன்பது சிறுவர்கள் உட்பட 17 பேர் காயம்.

☐ பத்தாயிரத்திற்கு மேற்பட்ட இந்திய அமெரிக்க கடற்படை வீரர்கள் பங்குபற்றிய கடல்யுத்த பயிற்சிகள் கோவா கடற்பரப்பில் இடம்பெற்றது.

☐ ஈராக் தலைநகர் பாக்தாத் மற்றும் ஹிலா நகரங்களில் இடம்பெற்ற பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் 21 பேர் பலி, 36பேர் காயம்.



**26**

☐ பெருநாட்டில் லிமா நகரிலிருந்து 670 கி.மீற்றர் தூரத்தில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டதில் நான்கு பேர் பலி, மின்சாரம் தொலைபேசி இணைப்பு துண்டிப்பு.

☐ சீனாவின் தென்பகுதிக் கரையோரத்தில் அமைந்துள்ள ஹைனன் மற்றும் குவாங்டோங் மாகாணங்களை "டேம்ரி" என்ற சூறாவளி தாக்கியது.


☐ ஈராக் தலைநகர் பாக்தாத்தின் முக்கிய மையப் பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலால் பத்துப் பேர் பலி; 20 பேர் வரை காயம்.

**27**

☐ ஆப்கானிஸ்தானில் உள்துறை அமைச்சராக இருந்த அலி அகமது ஜலாலி தனது பதவியை இராஜினாமா செய்தார்.

☐ ஈராக்கில் செயற்பட்டு வரும் அல்-ஹைதா தீவிரவாத அமைப்பின் முக்கிய தளபதி அபுஅசாம் இராணுவத்தினரால் சுட்டுக் கொலை.

☐ வியட்னாமின் கடலோரப் பகுதிகளை சூறாவளி தாக்கியதில் 54 பேர் பலியான்துடன் கரையோரப் பகுதிகள் பலத்த சேதம்.



Kyodo News

☐ஈராக் தலைநகர் பாக்தாத்தில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பத்துப் பேர் பலி; 21 பேர் படுகாயம்.



☐ எகிப்து நாட்டின் அதிபராக ஐந்தாவது முறையாகவும் ஹோஸ்னி முபாரக் பதவியேற்றார்.

**28**

☐ காஸாப்பகுதியில் இஸ்ரேல் யுத்த விமானங்கள் நடத்திய வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் ப்தாஹ் இயக்க அலுவலகம் பலத்தசேதமடைந்தது.

## இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டம் (கார்ப்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.

கடன் இல. 2043/2044 SRI (SF)

# கேள்விப்பத்திரம் கோரல்

01 ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ADB) கடனொன்றை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு (GOSL) போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டத்திற்காக (CAARP) ("கார்ப்திட்டம்" எனக் குறிப்பிடப் பெற்றுள்ளதுடன்) கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதிகளின் புனரமைப்பு வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவு களுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| ஒப்பந்தக்காரர் இல | வீதிகளின் பெயர் | பகுதிகள் (km) | | தகுதியான ஏலம் கேட்போர் | கூறுவிலை பிணைப்பணம் (மில்லியனில்) |
|---|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | | |
| RDA/ADB/CAARP/LCB/C03/A | கண்டி - யாழ்ப்பாணம் | 176 | 185 | M2& அதற்கு மேலும் | 4.0 |
| RDA/ADB/CAARP/LCB/C03/B | கண்டி - யாழ்ப்பாணம் | 185 | 193.6 | M2& அதற்கு மேலும் | 4.0 |
| RDA/ADB/CAARP/LCB/C12/B | பரந்தன் - பூநகரி வீதி | 16 | 18 | M5-M7 | 0.5 |
| RDA/ADB/CAARP/LCB/C13/B | பரந்தன் - பூநகரி வீதி | 24 | 26 | M5-M7 | 0.5 |
| RDA/ADB/CAARP/LCB/C14/A | பரந்தன் - பூநகரி வீதி | 0 | 4 | M4& அதற்கு மேலும் | 1.5 |
| RDA/ADB/CAARP/LCB/C14/B | பரந்தன் - பூநகரி வீதி | 4 | 8 | M4& அதற்கு மேலும் | 1.5 |
| RDA/ADB/CAARP/LCB/C15 | பரந்தன் - பூநகரி வீதி | 8 | 12 | M4& அதற்கு மேலும் | 1.5 |
| RDA/ADB/CAARP/LCB/C16 | பரந்தன் - பூநகரி வீதி | 12 | 14 | M5-M7 | 0.5 |
| RDA/ADB/CAARP/LCB/C33/A1 | அம்பிலாந்துறை - வீரமுனை வீதி | 16 | 18.5 | M5-M7 | 0.5 |
| RDA/ADB/CAARP/LCB/C33/A2 | அம்பிலாந்துறை - வீரமுனை வீதி | 18.5 | 21 | M5-M7 | 0.5 |

இலங்கை அரசின் சார்பாக நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றும் முகவராகச் செயற்படும்.

02. தற்பொழுது பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ள உறுதியான ஆர்வமுடைய சகல ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் தலைவர், அமைச்சு கேள்விச்சபை, நெடுஞ்சாலைகள் அமைச்சு, முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களுக்கு அழைப்பு விடுக்கின்றார்.

i) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவும், வீதி நிர்மாணத்துறையில் தரம் M7 அல்லது அதற்கு மேல் உள்ள ஒப்பந்தக்காரராக, கேள்விப்பத்திர அழைப்பு முடிவடையும் திகதிக்கு முன் குறைந்தது 14 நாட்கள் அங்கத்தவராகவும், எதிர்கால ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் வரை தொடர்ந்து அங்கத்தவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்டிருப்பதோடு, இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்டிருப்பதோடு, இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தில் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராகவும் இருக்க வேண்டும்.

ii) ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கத்துவ நாடுகளில் இருந்து வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்கள் மற்றும்

iii) மேற்குறிப்பிடப்பட்ட (i) மற்றும் (ii) இல் உள்ள தகுதியான வர்க்கத்தில் அடங்கும் உள்நாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கிடையில் இணைந்து செயற்படும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

iv) அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள், தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களாகவோ, இணைந்து செயற்படும் பங்காளிகளாகவோ, உப பங்காளிகளாகவோ தொழில் தருநரிடம் எந்த விதத்திலும் தங்கியில்லாததாய் இருத்தல் வேண்டும்.

03. கேள்விப்பத்திரமானது பரிசீலனைக்காக நிதித்தகுதி, தொழில்நுட்பத்தகுதி மற்றும் அனுபவம் போன்ற தேவையான ஆவணங்களைக் கொண்டிருத்தலும், அதேபோன்று நிதி சம்பந்தமான கேள்விப்பத்திரமும் வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட நிலையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உறை A-தொழில்நுட்பப்பிரேரணையானது, கேள்வி ஆவணம் Volume IV இல் குறிப்பிட்டபடி சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட தகுதிகாண் வினாக்கள் ஊடாக அனுபவம், தொழில்நுட்பத்தகைமை மற்றும் நிதித்தகைமை சம்பந்தமான தகவல்களைக் கொண்டிருப்பவை முதலில் திறக்கப்படும். அத்துடன் கேள்வி கோருவோரின் தகுதியும் பரிசீலனை செய்யப்படும்.

உறை B- வெற்றிகரமான தகைமைகளுக்கான பரிசீலனை செய்யப்பட்ட கேள்வி கோருவோரின் நிதிப்பிரேரணைகளைக் கொண்டிருப்பவை மட்டும் மேலதிக பரிசீலனைக்காகத் திறக்கப்படும்.

04. கேள்விப்பத்திரத்தில் அடங்கும் தகைமைக்குரிய கேள்வி கோருவோருக்கான அறிவுறுத்தல்கள், ஒப்பந்த நிபந்தனைகள், கட்டுமான பரிமாணங்கள், அளவுப் பட்டியல் மற்றும் வேறு தேவையான ஆவணங்கள் என்பவற்றை 03.10.2005 முதல் 24.10.2005 வரை சாதாரண வேலை நேரங்களில் பின்வரும் காரியாலயங்களில் பார்வையிடலாம்.

திட்டப்பணிப்பாளா/PMU-CAARP
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
பெருந்தெருக்கள் அமைச்சு,
3ஆம் மாடி செத்சிறிபாய, பத்தரமுல்ல.-

தொலைபேசி:-011-2865122,011-2862814
தொலைநகல்:- 001-2865122,
ஈ.மெயில்:- adb34@ sltnet.lk
அல்லது pdrnip @ sltnet.lk

பிரதிப்பணிப்பாளா (PMU-ADB)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கார்ப்திட்டப்பணிமனை,
கண்டிவீதி, வவுனியா.

024-2221458
024-4589510
adba9@ sltnet. lk அல்லது
rdaadb vav caarp @ yahoo.co.uk

பிரதிப்பணிப்பாளர் (PMU-ADB)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கார்ப்திட்டப்பணிமனை,
பொதுநூலகக்கட்டடம், சுங்கவீதி,
மட்டக்களப்பு, 065-2227167.

05. ஆர்வமும் தகைமையுமுள்ள கேள்வி கோருவோர் தங்களது எழுத்து மூல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து முழுமையான கேள்விப்பத்திர ஆவணங்களை மேற்குறிப்பிட்ட காரியாலயங்களில் இருந்து ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் ரூபா ஐந்தாயிரம்(5000/=) மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவினை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

06. முதலாம் பந்தியில் குறிப்பிட்டபடி கேள்வி கோருவோர் ஒன்று அல்லது அற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்குக் கேள்வி கோரலாம். தகுதியுடைய கேள்வி கோருவோருக்கு ஆரம்பத்தில் ஒப்பந்தங்கள் அளிக்கும் போது கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஆகக்கூடிய ஒப்பந்தங்கள் இத்திட்டத்தில் அளிக்கப்படும்.

தரம் M1 மற்றும் M2- ஆகக்கூடியது மூன்று (3) ஒப்பந்தங்கள்


தரம் M3 -ஆகக்கூடியது இரண்டு (2) ஒப்பந்தங்கள்

தரம் M4,M5,M6,& M7 - ஆகக்கூடியது ஒன்று (1) ஒப்பந்தம்

தரம் M1 மற்றும் M8 ஒப்பந்தகாரர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் மூன்று ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக அளிப்பு மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களில் ஏதாவது ஒன்றில் 50% பௌதீக பூர்த்தியினைக் கொண்டுள்ள அதேவேளை மூன்றாவது ஒப்பந்தத்தில் 80% திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (மதிப்பீடு செய்வதன் நிமித்தம் 80% பௌதீக பூர்த்தியினைக் கொண்டுள்ள திட்டங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டதாகக் கருதப்படும்)

(9ஆம் பக்கம் பார்க்க)

# நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 15 | 13 |
| 11 | 10 |
| 1984 | 2004 |

## செல்வன் விஜயரட்ணம்-சுதர்ஜன்

(மு/ஒட்டுசுட்டான் ம.வி. உயர்தரமாணவன்)
சிலையடி கற்சிலைமடு,ஒட்டுசுட்டான்
தீதி:-03-10-2005

பூவாகி,பிஞ்சாகி,காயாகி கனியாக பலன்தரும் வேளையில் நாம் உனை இழந்து தவிக்கின்றோம்.உன்னால் நாம் எண்ணிய எண்ணங்கள் பாளானதையா. தம்பி சுதர்ஜா பொறுக்குதில்லையடா எம் மனது ஓராண்டென்ன இந்த ஜென்மம் மறைந்தாலும் மறவாதையா உன் நினைவு......

உன் நினைவுடன்
அண்ணா:-மயில்வாசன்
அண்ணி :-ஜனார்த்தனி
பெறாமக்கள்:-திவேகா,ஜதுஷா.

(6014)

## சோதனைச் சாவடிக்கு நிரந்தரக் கட்டடம்

ஓமந்தை இராணுவ சோதனை நிலையம் நிரந்தரமாக கட்டப்படுவதாகஅங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் இன்றுவரை தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த ஓமந்தை சோதனை நிலையம் மிக வேகமாக நிரந்தர கட்டடமாக கட்டப்பட்டு வருகின்றது.

தனியார் ஒருவரின் காணியில் இராணுவம் சட்டவிரோதமாக நிரந்தர கட்டடத்தை அமைத்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (10)

## தையல் இயந்திரம் அன்பளிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாவடிக் கிராமத்தில் பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த 22 ஆம் திகதி 1.00 மணியளவில் ஐ.ஓ.எம் நிறுவனத்தின் நிதி உதவியுடன் கிளி/கிழக்கு புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் அ.நாகேஸ்வரி என்ற பயனாளிக்கே கிளி/கிழக்கு புனர்வாழ்வு நிறுவன கணக்காளர் குமுதினி வழங்கியுள்ளார். (12)

## ൦൦ ஆம் நாளில் நீங்காத நினைவினில்......

பொம்மியே.....
பொய்யில்லா உறவே.....
கண்ணில் நீர்பெருக
விண்ணை நீ அடைந்து
தொண்ணூறு நாளாச்சா?
முந்தநாள் போலிருக்கிறதே,
முகம் மலர்ந்து நீ சிரித்துநின்றது?
எமையெல்லாம் தவிக்கவிட்டு எங்கு
சென்றாய்
எமன்கொண்டுபோனானோ உன்னை
கட்டிய கணவன் கதறியழ
கூட வந்த உறவுகள் குமிறியழ
விட்டு நீ எங்கே போனாய்?
நிறைய காலங்கள் வாழவில்லை
ஆனாலும் பொம்மியம்மா நீ
நிறைய மனங்களில் வாழ்கிறாய்
உன் நினைவுகளை சுமந்து
உன் ஆத்மா சாந்திபெருக விரைந்து
அத்தனை பேரின் பிரார்த்திப்பும் உனக்காக.....



அமரர்.திருமதி.லோகேஸ்வரன் சுசீலா
(பொம்மி)

| உதிர்வு | மலர்வு |
|---|---|
| 2005 | 1968 |
| 07 | 02 |
| 06 | 15 |

03.10.2005 இன்றுஅன்னாரின் இல்லத்தில்நடைபெறும் 90ஆம் நாள் நினைவு நிகழ்வில்உற்றார்,உறவினர்கள் நண்பர்கள், போராளிகள்அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கணவர் ராம்கி
சகோதரிகள், மைத்துனர்மார்
இல.146 கட்சன் வீதி
வட்டக்கச்சி. (சி.12892)


அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு

தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தீர்வுகளை விவாதிக்க...

ஆசிரியர் கல்வி விருத்திக்கான திட்டங்களை அறிந்து கொள்ள


தரம்M3 ஒப்பந்தகாரர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் இரண்டு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக அளிப்பு மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களில் ஏதாவது ஒன்றில் 50% திருப்திகரமான பௌதீக பூர்த்தியினைக் கொண்டுள்ள அதேவேளை இரண்டாவது ஒப்பந்தத்தில் 80% திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (மதிப்பீடு செய்வதன் நிமித்தம் 80% பௌதீக பூர்த்தியினைக் கொண்டுள்ள திட்டங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டதாகக் கருதப்படும்).

தரம்M4,M5,M6, மற்றும் M7 ஒப்பந்தகாரர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு ஒப்பந்தம் அளிக்கப்பட்டிருந்தால், அதன் 80% திருப்திகரமான பௌதீக பூர்த்தியின் பின்னரே ஏனைய அளிப்புச் செய்யப்படும்.

- காாப் திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருப்பின் இதற்கமைவாக கருத்திற் கொள்ளப்படும் இணைப்பு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருப்பின ஒவ்வொரு பங்காளிக்கும் தனியாகவும், இதற்கமைவாகவும் பரிசீலனை செய்யப்படும்.

மேற்கூறப்பட்ட பிரமாணத்தில் தகுதியான ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தங்கள் அளிக்கும் போது மொத்தத்தில் அதிகுறைவான செலவினைப் பிரதிபலிக்கின்ற கேள்வி கோருவோருக்கு ஒப்பந்தம் அளிக்கப்படும்.

07. கேள்வி கோருவோர் சகல ஒப்பந்தங்களையும் உள்ளடக்கிய பொதுவான கேள்விப்பத்திரப் பாதுகாப்பு ஆவணத்தின் முதலாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பெறுமதியின் கீழ்காட்டப்பட்டுள்ள, ஆக்கக்கூடிய பெறுமானங்களுக்கு அமைவாக ஒரே நேரத்தில் அழைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களுக்கு உறை Aயினுள் அடக்கலாம்.

(a) ஒப்பந்தக்காரர் தரம் M1&M2- ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் ரூபா.4.0 அல்லது 1.5 மில்லியன் ஆக ஆகக்கூடியது ரூபா 9.5 மில்லியன்.

(b) ஒப்பந்தக்காரர் தரம் M3- ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் ரூபா 1.5 மில்லியன் ஆகக்கூடியது ரூபா 3.0 மில்லியன்.

(c) ஒப்பந்தக்காரர் தரம் M4 - ரூபா ஏதாவது ஒப்பந்தத்திற்குமாக ரூபா 1.5 மில்லியன் .

(d) ஒப்பந்தக்காரர் தரம் M7 ரூபா ஏதாவது ஒப்பந்தத்திற்குமாக ரூபா 0.5 மில்லியன் .

ADB யின் உறுப்புரிமை நாடுகளின் ஒப்பந்தக்காரர்கள் தரம்-M1 ஒப்பந்தக்காரர்களாக கருத்திற் கொள்ளப்படுவார்கள்.
சகல கேள்விகோரல்களும், பிணைப்பத்திரங்களும் 07.11.2005 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் அமைச்சு கேள்வி கோரல் சபை (MTB) , பெருந்தெருக்கள் அமைச்சு, 9ஆம் மாடி "செத்சிறிபாய", பத்தரமுல்ல இல் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
உறை-A இல் பூரணப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப ஆலோசனையானது, ஒப்பந்தக்காரர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னால் உடனடியாகத் திறக்கப்படும். உறை B ஆனது ஒப்பந்தக்காரர்களின் தராதரம் மதிப்பிட்டு இறுதி முடிவு எடுக்கப்பட முன்னர் திறக்கப்படமாட்டாது.

08. கேள்வி கோருவோருடைய தகைமையானது, கேள்விப்பத்திரத்தினுடைய தொழில்நுட்ப பரிசீலனையின் பகுதியாக கீழே குறிப்பிடப்படுபவை மீளாய்வு செய்வதோடு கேள்விக்கொத்தில் வழங்கப்பட்ட ஏனைய விபரங்களும் உள்ளடக்கப்படும்.

i) தரம் M4 உம் அதற்கு மேலுள்ள ஒப்பந்தக்காரர்களும் கட்டுமானப்பணியில் ஐந்து (5) வருடப் பொதுவான அனுபவமும், தரம்M5-M7 ஐ உடைய ஒப்பந்தக் கட்டுமானப்பணியில் மூன்று (3) வருடப் பொதுவான அனுபவமும் கொண்டிருத்தல் வேண்டும்.

ii) சகல தர ஒப்பந்தக் காரர்களும் கடந்த மூன்று வருடங்களுக்குக் குறைந்தது ஒரு வீதி வேலையில், இந்த ஒப்பந்தத்திற்குச் சமமான நிபந்தனைகளில் விசேட அனுபவத்தையும் மற்றும்.


iii) ஒப்பந்த இல.C03/A உம் C03/B ஆகியவற்றை விண்ணப்பிக்கக்கோரும் ஒப்பந்தக்காரர்கள் கடந்த 03 வருடங்களுக்குள் குறைந்தது ரூபா 200 மில்லியன் பெறுமான கட்டுமான சுழற்சியில் ஈடுபட்டு மற்றும், ஒப்பந்த இல. C14/A ,C14/B உம் C15 ஆகியவற்றை விண்ணப்பிக்கும் ஒப்பந்தக்காரர் குறைந்தது கடந்த 3 வருடங்களுக்கு ரூபா 60 மில்லியன் பெறுமான கட்டுமான சுழற்சியில் ஈடுபட்டிருத்தல் அவசியமாகும்.

09. கேள்வித் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருனர் பொறுப்பாக மாட்டார்.

தலைவர்,
அமைச்சு கேள்விகோரல் சபை,
பெருந்தெருக்கள் அமைச்சு,
9ஆவது மாடி,
"செத்சிறிபாய" பத்தரமுல்ல.

(சி.12932)

# ஷுபீர் அகமது பந்து வீச்சில் சர்ச்சைகள் ஏதும் இல்லை



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் ஷுபீர் அகமது பந்து வீச்சு முறையில் சர்ச்சைகள் ஏதுமில்லை என்று அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

ஆசிய அளவில் புகழ்பெற்ற பந்து வீச்சாளர்கள் எப்போதுமே எறிதல் சர்ச்சையில் சிக்குவது வழக்கம். பாகிஸ்தான் அணியின் இளம் வீரரான ஷுபீர் அகமது கடந்த மே மாதம் மேற்கிந்தியத்தீவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது இந்தப் பிரச்சினையில் சிக்கினார். இவர் மீது இவ்வாறு குற்றம் சுமத்தப்படுவது மூன்றாவது முறை. இதனால் ஷுபீர் அகமதுவின் பந்து வீச்சை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஐ.சி.சி. மேற்கு அவுஸ் திரேலியாவில் உள்ள மனித அசைவுகள் குறித்த பல்கலைக் கழகத்திடம் தெரிவித்திருந்தது. கடந்த மூன்று மாதமாக நடத்தப் பட்ட ஆய்வில் ஷுபீர் ஐ.சி.சி நிர்ணயித்த 15 டிகிரி அளவில் முழங்கையை சுழற்றுகிறார் என்று தெரியவந்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இயக்குநர் சலீம் அல்தாப் கூறுகையில், பல்கலைக்கழக ஆய்வாளர்களிடம் பேசியதில் ஷுபீர் பந்து வீச்சில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்துள்ளனர். இவர்கள் தங்கள் அறிக்கையை அடுத்த வாரம் ஐ.சி.சி.இற்கு அனுப்பவுள்ளனர். இறுதியாக ஐ.சி.சி. பந்து வீச்சுக் குழு இவரது பந்து வீச்சை ஆய்வு செய்யும். தற்போதைய நிலவரப்படி பெரும்பாலும் எறிதல் சர்ச்சையில் இருந்து இவர் விடுவிக்கப்படலாம். இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் ஷுபீர் அகமது கட்டாயம் இடம்பெறுவார் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

# கிரிக்கெட் தரவரிசையில் மேலும் முன்னேற இங்கிலாந்து அணி மேலும் உழைக்க வேண்டும்

## இந்திய அணியின் துணைத்தலைவர் ராவிட்



ஆஷஸ் கிண்ணத்தை வென்ற இங்கிலாந்து அணி கிரிக்கெட் தரவரிசையில் முதலாமிடத்தைப்பெறமேலும் உழைக்க வேண்டும் என இந்திய கிரிக்கெட் அணியின் உபதலைவர் ராகுல் ராவிட் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவை சற்று கீழே இறக்கியபோதிலும் ஏனைய அணிகளை அது வெற்றி கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ள ராவிட், உலகில் அவுஸ்திரேலிய அணி படிப்படியாக முன்னேறியது போல் இங்கிலாந்து அணியும் முன்னேற வேண்டும் என்று கூறியுள்ளார்.

தற்போது உலக 11பேர் அணிக்கான போட்டியில் பங்கேற்க அவுஸ்திரேலியா சென்றுள்ளஅவர் மேலும் தெரிவிக்கும்போது இங்கிலாந்து அணி விரைவில் உபகண்டத்தில்சுற்றுப்பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான், இந்திய அணிகளுடன் போட்டிகளில் கலந்து கொள்ளவிருப்பதாக தெரிவித்ததுடன் அவ்விரண்டு அணிகளையும் வென்று விட்டால் அதன் தரத்தை நிரூபித்ததாக நம்பலாம் என்றும் கூறியுள்ளார்.

# டெண்டுல்கர், லாறா மிகச்சிறந்தவர்கள் சுயசரிதையில் அன்ரூ பிளிண்டொப்



நான் சந்தித்த வீரர்களிலேயே சச்சின் டெண்டுல்கர், பிரையன் லாறா இருவருமே மிகச் சிறந்த வீரர்களாவர் என்கிறார் பிளிண்டொப்.

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் அன்ரூ பிளிண்டொப் சமீபத்தில் 'பீயிங் பிரெட்டி' என்ற தனது சுயசரிதையை வெளியிட்டார். இதில் டில்லியில் நடந்த ஒரு நாள் போட்டியின்போது தன்னை துப்பாக்கியால் சுட முயற்சித்தார்கள் என எழுதி திடீர் பரபரப்பு ஏற்படுத்தினார். தற்போது அதே புத்தக்கத்தில் சச்சினை பிளிண்டொப் புகழ்ந்து எழுதியது வெளிவந்துள்ளது.

"எனது வாழ்க்கையில் நான் சந்தித்த வீரர்களிலே மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்றால் அது சச்சின், லாறா மட்டுமே. மிக எளிமையான நுட்பங்களை கையாளுபவர் சச்சின். ஆனால், லாறா அப்படிக் கிடையாது. களத்தில் இருக்கும்போது கண நேரத்தில் நிறைய உடல் அசைவுகளுடன் துடுப்பாட்டம் செய்வார். இவருக்குப் பந்து வீசும்போது விக்கெட் வீழ்த்த நிறைய வாய்ப்புக்கள் கிடைக்கும் என பிளிண்டொப் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.



புடாபெஸ்ட் நகரில் சர்வதேச மல்யுத்த சம்பியன்ஷிப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் பெண்களுக்கான 55 கிலோ பிரிவில், ரஷ்ய வீராங்கனை நடாலியா கோல்ட்ஸ் (இடது) பிடியில் சிக்கி தவிக்கிறார் ஸ்பெயின் வீராங்கனை மின்வா மான்டரோ. இந்தப் போட்டியில் கோல்ட்ஸ் வெற்றி பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

விளையாட்டு

# பிரதேச மாவீரர் நினைவு மென்பந்து போட்டி அரையிறுதி, இறுதிப் போட்டிகள் இன்று

ஆனைவிழுந்தான் பிரதேச மாவீரர்கள் நினைவாக பைந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் அரையிறுதி, இறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

கடந்த மூன்று நாட்களாக பிரேமா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் மேற்படி போட்டித் தொடரில் நேற்று நடைபெற்ற போட்டியில் கிருஸ்ணபாரதி அணி, கனகபுரம் அணியையும், நியூஸ்ரார் அணி தோழர்கள் அணியையும், தூயதமிழ் அணி மாலதி அணியையும் தோற்கடித்து அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு முன்னணி அணிகள் இச்சுற்றுப் போட்டியில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.





# இன்னும் வலியுள்ளது



நான்கு மாதங்களுக் குப்பின் சலஞ்சர் கிண்ணத்தில் சச்சின் டெண்டுல்கர் விளையாடவிருக்கிறார். அவர் முழு உடல் தகுதியுடன் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தாலும் முழங்கையில் இன்னும் வலியிருப்பதாக சச்சின் தெரிவித்துள்ளார். இந்நிலையில் மேற்படி போட்டியில் சச்சின் கலந்து கொள்வது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# 21 முன்பள்ளிச் சிறார்களின் திறனாய்வு நிகழ்வும், கௌரவிப்பும்



தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்குபடுத்தலில் கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 21 முன்பள்ளிச் சிறார்களின் திறனாய்வு நிகழ்வும், சிறுவர் தின கௌரவிப்பும் நேற்று முன்தினம் இராமநாதபுரம் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் மாலை 2.00 மணியளவில் விளையாட்டுக் குழுத் தலை[illegible] வே. சிவநேசன் தலைமையில் இடம்பெற்றது.

பொதுச்சுடரினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளனும், கிளி. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணனும் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக் கொடியினை திருமதி யோ. நிலாவும், கிளி. கிழக்கு புனர்வாழ்வுக் கொடியினை இணைப்பாளர் சிவரஞ்சினியும், 21 முன்பள்ளிகளுக்கான கொடியினை முன்பள்ளிகளின் முதன்மை ஆசிரியர்களும் ஏற்றி வைத்தனர். வரவேற்புரையினை தூயமணி முன்பள்ளிச் சிறார்கள் நிகழ்த்தியதோடு, ஆசி உரையினை சோ. தங்கன் நிகழ்த்தினார். இத்தோடு, ஆரம்பமான நிகழ்வில் அங்கயற்கண்ணி இல்லம், திலீபன் இல்லம், மில்லர் இல்லம், மாலதி இல்லம் என நான்காக பிரிக்கப்பட்டு சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது. ஆரம்பமான நிகழ்வில் ஓட்டம், தாராநடை, கொடிநடுதல், நீர்நிரப்புதல், வினோதஉடை, அசைவும் இசையும், வர்ணம்தீட்டுதல், பழம்பொறுக்குதல் உட்பட இன்னும்பல விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. அத்தோடு, வெற்றிபெற்ற சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு போராளிகள், பொறுப்பாளர்கள், நிறுவனப் பணியாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலதரப்பட்டோர் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (12)


# இந்தியாவுடனான ஒரு நாள் போட்டி சிறிலங்கா அணி 21ஆம் திகதி பயணம்




ஏழு ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ஆடுவதற்காக சிறிலங்கா அணி இந்தியா செல்கிறது.

அத்தப்பத்து தலைமை யிலான சிறிலங்கா கிரிக் கெட் அணி இந்தியாவில் பயணம் செய்து ஏழு ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் ஆடுகிறது.

இதற்கான 21ஆம் [illegible]கதி இந்தியா பயணமாகும் சிறிலங்கா அணி இதற்கு அடு[illegible] நாள் 22ஆம் திகதி பயிற்சி ஆட்டம் ஒன்றில் ஆடுகிற[illegible] இந்தியா - சிறிலங்கா இடையேயான முதல் ஒரு நாள் [illegible]ட்டி 25ஆம் திகதி நாக்பூரில் நடக்கிறது. ஏழாவதும் மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி அடுத்த மாதம் (நவம்பர்) ஆறாம் திகதி பரோடாவில் நடக்கிறது.





**சிந்தனைக்கு**

காலம் காலமாக எமது மக்கள் அனுபவித்த அவலங்கள்- சாவும் அழிவுமாக அவர்கள் சந்தித்த அனர்த்தங்கள் சோகத்தின் சுமையால் அவர்கள் சிந்திய இரத்தக் கண்ணீ -இவையெல்லாம் பௌத்த தேசத்தின் காருண்யத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 03.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## எவ்வாறு சாத்தியமாகும்!

சிறிலங்காவின் தற்போதைய அரசியல் யாப்பின் கீழ் "இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது" என்ற எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க சனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றுக்கள் சகலரும் அறிந்ததொன்றே. ஆனால், இதற்காக ரணில் விக்கிரமசிங்க உட்பட சிங்களத் தலைவர்கள் யாராவது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக உள்ளனரா? ஏனெனில் அதுவே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூடியதாகும்.

சனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்கனவே வெளியிட்டுவிட்டார். இத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒஸ்லோ பிரகடனம், டோக்கியோ மாநாடு என்பதன் அடிப்படையில் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்துள்ளார். (இதனைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பது வேறு விடயம்) இவ்விஞ்ஞாபனத்தில் அரசியல் யாப்புத் திருத்தம் பற்றி அவர் உறுதிபட எதையும் தெளிவுபடுத்தியதாக இல்லை.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், ஐக்கிய இலங்கை என்பதற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் அளவிற்கு இனப்பிரச்சினைத் தீர்விற்கு அளிக்கப்பட்டதாக இல்லை. இதேவேளை ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இனப்பிரச்சினை விடயத்தில் ஒரு ஒத்தகொள்கை ஏற்பட்டுள்ளது போன்றதொரு தோற்றப்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெறும் வேளையில் சுதந்திரக்கட்சியுடன் இணக்கப்பாடு ஒன்று காண்பது சுலபமானதாக இருக்கும் என்பது போன்றதொரு தோற்றப்பாட்டை அவர் ஏற்படுத்த முற்படுவதாகவும் உள்ளது.

ஆனால், இத்தனைக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கையென்ன? சுதந்திரக்கட்சியை சனாதிபதி சந்திரிகா பிரதிநிதித்துவப்படுத்தப் போகின்றாரா? அன்றி மகிந்த ராஜபக்ஷ பிரதிநிதித்துவப்படுத்தப் போகின்றாரா? ஏனெனில் இன்று சனாதிபதி சந்திரிகா சுதந்திரக்கட்சியின் தலைவி தானே எனக் கூறிக் கொள்வதோடு இனப்பிரச்சினைக்குச் சமஷ்டி முறையிலான தீர்வு குறித்தும் பேசலாம்.

ஆனால், சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷவோ இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையின் கீழேயே தீர்வு, தமிழருக்கு என்று ஒரு நாயகமோ சுயநிர்ணயமோ எதுவுமே இங்கில்லை என்ற கொள்கையுடைய கட்சியுடன் கூட்டுச்சேர்ந்துள்ளார். தேர்தலில் அத்தகையோரை நம்பியே அவர் போட்டியிடவும் இருக்கின்றார்.

இதற்கும் அப்பால் கடந்த அரை நூற்றாண்டு காலமாக முரண்பட்டான அரசியல் போக்கை கடைப்பிடித்த இவ்விரு கட்சிகளும் அதிகாரத்திற்கான தமது போட்டியைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தை மேசைக்கு ஒன்றாக முன்வருவார்களா? சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதிகாரத்திற்கு வந்தால் ஐ.தே. கட்சி கூட இத்தகையதொரு இணக்கப்பாடானதொரு முடிவுக்கு முன்வருமா?

அவ்வாறு ஐ.தே.கட்சி முன்வரத் தயாராக இருந்திருப்பின் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஓரளவாயினும் முன்னேற்றத்தையும் கண்டிருக்கலாம். பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஓர் இக்கட்டான நிலையில் ஐ.தே.க. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையே ஒழிய அதனை ஆதரித்ததாக இல்லை. சிலவேளை பொதுக்கட்டமைப்பிற்கு ஜே.வி.பி ஆதரவு தெரிவித்திருப்பின் ஐ.தே.க. அதனை வெளிப்படையாகவே எதிர்த்திருக்கக்கூடும்.

சிறிலங்காவின் அரசியல் யாப்பில் மாற்றமென்பது இலகுவில் செய்துவிடக் கூடியதானதொன்றல்ல. அதன் தேர்தல் முறையில் இருந்து அதன் அதிகார வரையறைகள் வரை எதுவுமே மாற்றத்திற்கு உட்பட்டவையாக இல்லை. அத்தோடு சிறிலங்காவின் அரசியல் சூழ்நிலையும் இதற்கு உகந்ததாகவும் இல்லை.

சிறிலங்கா அரசியல் யாப்புக் குறித்த அரசியல் யதார்த்தத்தை உள்ளபடியே கூறுவதனால் அதனை அதன் அரசியல் யாப்பு விதிமுறைக்கு உட்பட்ட வழிமுறையில் மாற்றியமைக்க முடியாதென்பதேயாகும். இது தற்செயலானதொன்றல்ல. இதனை உருவாக்கிய முன்னாள் சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் இது திட்டமிட்ட அடிப்படையில் உருவாக்கப்பட்டதொன்றாகும்.

மாறாக இவ் அரசியல் யாப்பு மாற்றியமைக்கப்பட வேண்டுமானால் ஒரு வகையில் புரட்சிகரமான சிந்தனையும் அர்ப்பணிப்புடன் கூடியதானதொரு தலைமை சிங்களவர் இடையே உருவாக வேண்டும். அல்லது, தற்போதைய அரசியற் தலைவர்கள் தமது அதிகாரப் போட்டிக்கான அரசியல் நடவடிக்கைகளைக் கைவிட்டு, நாட்டின் நலனுக்கு முதன்மை அளிக்கும் என்ற ரீதியில் இனப்பிரச்சினைக்கான அரசியல் நிலைப்பாட்டிற்கு வரவேண்டும்.

அத்தகையதொரு சூழ்நிலை உருவாகாது அரசியல் யாப்பு மாற்றம் குறித்தோ, அதன் அடிப்படையில் அரசியல் தீர்வு குறித்தோ பேசுவது அர்த்தமற்றது. ஒருவகையில் மோசடித்தனமானதும் கூட. ஆகையினால் இனப்பிரச்சினைத் தீர்விற்கென அரசியல் யாப்பை மாற்றியமைப்பேன் எனத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதிபடக் கூறாத எவருமே இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை எவ்வாறு கொண்டுவர முடியும்?

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதே நாடு எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை

**ஐ.தே.க சனாதிபதி வேட்பாளர் ரணில்**

வாழ்க்கைச் செலவு தொடர்ந்தும் அதிகரித்து வருவதே தற்போது நாடு எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை என்று எதிர்க்கட்சி தலைவரும் சனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அளவிற்கதிகமாக நாணயம் அச்சிடப்படுவதனால், நாட்டின் பொருளாதாரம் மோசமான நிலைக்கு செல்கின்றது.இந்தப் போக்கை மாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகியுள்ளது. இந்த இலக்கை நாம் அடைய ஒரு வருடத்திற்கும் அதிக காலம் பிடிக்கும்.

அந்த இலக்கை அடையும் வரை நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கப்படுவது மிக அவசியம். அதற்கென 500 கோடி ரூபா எம்மால் ஒதுக்கப்படும்.இந்த நிதியில் இருந்து மக்களுக்கு தேவையான முக்கிய மூன்று பொருட்கள் எம்மால் இனங்காணப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு அமைய 400 கிராம் பால் மா ஆகக் கூடிய விலையாக 139 ரூபாவிற்கும், மைசூர் பருப்பு 500 கிராம் ஆகக் கூடிய விலையாக 34 ரூபாவிற்கும் நுகர்வோருக்கு பகிர்ந்தளிக்கப்படும்.இது தவிர இறக்குமதி செய்யப்பட்ட நெத்தலிக் கருவாடு 94 ரூபாவிற்கும் நுகர்வோருக்கு வழங்கப்படும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, விமல் வீரவன்ச போன்றவர்கள் மக்களின் பிரச்சினைகளை எந்த வகையிலும் தீர்க்க முனைபவர்கள் அல்ல. ஆனால் சனாதிபதி வேட்பாளரான நான் மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வேலைத் திட்டம் ஒன்றை அமைத்துள்ளேன். பொய் யான வாக்குறுதிகளைக் கொடுத்து மக்களை ஏமாற்றும் செயற்பாட்டை நான் கொண்டிருக்கவில்லை என தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, உறுதியான அபிவிருத்தி இன்றி எந்த நாடும் முன்னேறாது என தெரிவித்தார். (32)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு சந்திரிகாவின் பங்களிப்பே காரணம்

**அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா**

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் தமது அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பயணத்தடை விதித்துள்ளதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முக்கிய பங்களிப்பே காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாக ஆராய்ந்தே இந்த முடிவை எடுத்திருப்பதாகவும், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டதன் பின்னர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய நாடுகள் சபையில் எடுத்துக் கூறிய கருத்துக்கள் ஐரோப்பிய ஒன்றியத் தின் முடிவுக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது எனவும், அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (32)

# தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்க சு.க உயர்குழு இன்று கூடுகிறது

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் வகையில் குழு இன்று கூடவுள்ளது. பிரதமரும் கட்சியின் சனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இந்தக் குழு கூடவுள்ளது. இதன்போது சனாதிபதியின் ஆலோசனையின்படி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு ஏற்பவும் மஹிந்த ராஜபக்ஷ ஜே .வி. பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் விஞ்ஞாபனத்தை தயாரிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் அமைச்சர்களான ரட்ணசிறி விக்கிரமநாயக்க, மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த், சரத் அமுனுகம, நிமால் சிறிபால டி சில்வா போன்றோர் உள்ளடங்கியுள்ளனர்.

இதேவேளை சனாதிபதியின் ஆலோசனையை மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ள மறுப்பாராக இருந்தால் அவர் சிறிலங்கா சுதந்திர கட்சியின் சனாதிபதி வேட்பாளர் நிலையில் இருந்து ஜே .வி. பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் வேட்பாளராகவே கருதப்படுவார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். சனாதிபதி சமஷ்டித் தீர்வு மற்றும் ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கம் என்பவற்றை வலியுறுத்தியுள்ளமையையும் அதனை மஹிந்த ராஜபக்ஷ, ஜே. வி. பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடனான , ஒப்பந்தங்களின் மூலம் மறுத்துள்ளமையும் முரண்பாடான விடயங்கள் என ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார். (32)

# பா.உக்களுக்கு தீர்வையற்ற வாகனம் அர[illegible]க்கு 258 கோடி நட்டம்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுள்ள தீர்வையற்ற வாகனங்கள் காரணமாக அரசாங்கத்திற்கு கோடிக்கணக்கான வரி வருமானம் இழக்கநேரிடும் என தெரிவிக்கப்படுகிறது. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களுக்கும் அரசாங்கம் தீர்வையற்ற வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்க தீர்மானித்துள்ளது. இதன் காரணமாக அரசாங்கத்திற்கு கிடைக்கவேண்டிய 258 கோடியே 49 இலட்சத்து 68 ஆயிரம் ரூபா வரி கிடைக்காமல் போகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இறக்குமதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் பெறுமதி சுமார் 35 இலட்சம் ரூபாவாகும்.இவ்வாறான வாகனங்களுக்கு விதிக்கப்படும் 325 வீத வரியுடன் சேர்த்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான வாகனப் பெறுமதி ஒரு கோடியே 14 இலட்சத்து 88 ஆயிரத்து 750 ரூபாவாகும்..

அதே நேரம் இவ்வாறான வாகனத்தின் உண்மை சந்தைப் பெறுமதி ஒரு கோடியே 49 இலட்சத்து 88 ஆயிரத்து 750 ரூபாவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# சனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு புதன்கிழமை முடிவு அறிவிக்கப்படும்

**இ.தொ.க தலைவர் தொண்டமான் தெரிவிப்பு**

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் தொடர்பில் எடுக்கவுள்ள தீர்மானங்கள் குறித்து வெளியிடப்பட்டு வரும் செய்திகளை கட்சியின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் மறுத்துள்ளார். சனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் பணம் பெறப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் யாவும் சில பத்திரிகைகளின் சொந்த நோக்கங்களை மையமாக கொண்டவையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். தமது கட்சி மலையக மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டு வருவதன் அடிப்படையில் தொடந்தும் எடுக்க வேண்டிய தீர்மானம் குறித்து ஆராய்ந்து வருகிறது. இந்த நிலையில் எதிர்வரும் ஐந்தாம் திகதி தமது கட்சி இது தொடர்பில் தீர்மானத்தை அறிவிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (32)

# கனடாவில் மாவீரர் நினைவெழுச்சி நிகழ்வும் “போரும் சமாதானமும்” நூல் வெளியீடும்

கனடா ரொரன்ரோவில் லெப்.கேணல் திலீபன், கேணல் சங்கர், லெப்.கேணல் விக்டர், லெப்.கேணல் புலேந்திரன், லெப்.கேணல் குமரப்பா உட்பட 12 வேங்கைகள், இரண்டாம் லெப். மாலதி கேணல் ராயு ஆகிய மாவீரர்களின் நினைவு நாள் நேற்று முன்தினம் மாலை






6.30 மணியளவில் தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகியது. முதல் நிகழ்வாக பொன்குமாரனின் தந்தை பொதுச்சுடரினை ஏற்றினார். அதனைத் தொடர்ந்து கனடா நாட்டுக் கொடியினை சி2 தொகுதிப் பொறுப்பாளர் விஜயும் தமிழீழ தேசியக் கொடியினை 2ஆம் லெப்.தனேந்திரன் லெப்.தவமலர், 2ஆம் பொறியியலாளர் தணிகைமாறன் ஆகியோரின் தாயார் தேவகுஞ்சரி துரைசிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து ஈகச்சுடரினை மாவீரர் டான்சன் மகிழன் ஆகியோரின் தந்தை மற்றும் திருமதி.தேவகுஞ்சரி துரைசிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து அகவணக்கம், மலர் வணக்கம் என்பன இடம் பெற்றதுடன் தொடர்ந்து திருமதி பசுபதி பிரதீசனின் மாணவிகள் வழங்கிய வரவேற்பு நடனம் இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் வழங்கிய மாவீரர் இசை நாடகமும் ரீயன் பாக் மாணவர்களின் மாவீரர் நினைவுரையும்இடம் பெற்றது. தொடர்ந்து பத்திரிகையாசிரியர் கமல் உரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் எழுதிய ‘போரும் சமாதானமும்’ நூல் வெளியீட்டு விழா நடை பெற்றது. கனடா உலகத் தமிழர் இயக்கத்தின் அரசியல் ஆய்வாளர் நேரு குணரட்ணம் நூல் அறிமுகத்தினை செய்தார். அந் நூல் ஆய்வினை கப்டன் வானதியின் சகோதரியும் ஆசிரியருமான கலாநிதி குலமோகன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கனேடியத் தமிழ்ப் பேரவை உறுப்பினர் சதீஸ் தட்சணாமூர்த்தி புத்தக ஆவணப்படுத்தல் பற்றிப் பேசினார். அதனைத் தொடர்ந்து புத்தக வெளியீடு இடம் பெற்றது. 1 ஆவது பிரதியினை உலகத் தமிழர் இயக்கத் தலைவர் சிற்றம்பலம் வழங்க திருமதி. தேவகுஞ்சரி துரைசிங்கம் பெற்றுக் கொண்டார். (எ)

# சனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க ஐரோப்பிய யூனியன் சம்மதம்

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கும் பணிகளில் தமது பிரதிநிதிகளை ஈடுபடுத்த ஐரோப்பிய யூனியன் தற்சமயம் தமது ஒப்புதலை வழங்கியுள்ளது.

முன்னர் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட ஐரோப்பிய ஒன்றியம் மறுப்புத் தெரிவித்திருந்தது. இதற்கான காரணம், இலங்கையில் முன்னர் நடைபெற்ற தேர்தல்களின் பொழுது, ஐரோப்பிய ஒன்றியத்தினால், தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளை அரசாங்கம் அமுல் படுத்த தவறியமையே என பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்ரிறிக்கோ தெரிவித்துள்ளார். (32)

## ஐரோப்பிய....

யுத்த நிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாகியும் சமாதானப் பேச்சுக்கள் மூலம் தமிழ் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை. கடற்கோள் தொடர்பான புனர்நிர்மாண, புனர்வாழ்வு பொதுக் கட்டமைப்பு உடன்பாடு செயலற்றுள்ளது. இந்த உண்மையை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

அரச படையினரும், துணைப் படைத் தமிழ்க் குழுக்களும் இணைந்து சமாதான முயற்சியைக் குழப்பக் கூடிய வகையில் செயற்பட்டு வருகின்றனர். இதனால் சமாதான முயற்சி பாதிக்கப்பட்டிருப்பதையும் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கை அரசாங்கம் சமாதான முயற்சியில் இதய சுத்தியுடன் ஆக்கபூர்வமாக செயற்படாததே சமாதான முயற்சி ஸ்தம்பித்துள்ளதற்கான முக்கிய காரணமாகும். விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களும் அல்ல.

கதிர்காமர் கொலையை முன்வைத்து ஐரோப்பிய யூனியன், விடுதலைப்புலிகள் மீது பயணத் தடை விதித்துள்ளது. கதிர்காமர் கொலையை விடுதலைப்புலிகள் தான் செய்தார்கள் என்பதற்கு சுயேட்சையான சாட்சியம் கிடையாது. இந்த நிலையில் விடுதலைப்புலிகள் மீது பயணத் தடையை மறு அறிவித்தல் வரை ஐரோப்பிய யூனியன் விதித்துள்ளது நியாயமற்றதாகும். எனவே, விடுதலைப் புலிகள் மீதான பயணத் தடையை தாமதமின்றி ஐரோப்பிய யூனியன் நீக்க வேண்டும், இவ்வாறு சம்பந்தன் தனது பேச்சில் தெரிவித்தார். (25)

## திருமலையில்....

பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம் கலந்துரையாடலை ஒழுங்கு செய்திருந்தனர்.

சட்டத்தரணி கா.சிவபாலன் திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன், திருமலை மாவட்ட மகளிர் ஒன்றியத்தலைவர் திருமதி க.கண்மணி,பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் ஆகியோரும் பேசினர்.

அதனையடுத்து தமிழ்தேசிய எழுச்சி மாநாட்டை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான பிரதான குழு திருகோணமலை நகர பகுதி குச்சவளி,தம்பலகாமம், கந்தளாய், மூதூர் பிரதேச செயலர் பகுதிகளி லிருந்தும் உறுப்பினர்கள் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டனர் ஒவ்வொரு பிரதேசசெயலர் பிரிவிலும் உப குழுக்களை அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் தமது உரிமையை வெளிப்படுத்தும் வகையில்வரலாறு காணாத நிகழ்வு ஒன்றை எதிர்வரும் 22 ஆம்திகதி நடாத்துவது எனஇக் கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது. (32,25)

# தமிழர்களுக்கெதிரான கல்விப் புறக்கணிப்பு 26 கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம்

## ஆசிரியர் தினத்தன்று அடையாளப் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்விநிர்வாகச் செயற்பாடுகளிலும், கல்வி மேம்பாட்டுத் திட்டங்களிலும் தமிழ் இனத்தை சிறிலங்கா அரசு திட்டமிட்ட முறையில் புறக்கணிப்புச் செய்து வருகின்றமைக்கு கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ள இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்,

கல்வி ரீதியாக தமிழ் இனத்தை ஒடுக்குமுறைகளுக் குள்ளாக்கி வரும் சிறிலங்கா அரசின் இனவாதக் கடும் போக்குகளை எதிர்த்துப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தவும் தீர்மானித் துள்ளது.

இது சம்பந்தமான தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தீர்மானங்களை தெளிவுபடுத்தும் முக்கிய சந்திப்பு ஒன்று நேற்றுப் பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ்.இந்துஆரம்பப் பாடசாலையில் நடைபெற்றது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட பொதுச் செயலாளர் பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும், பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசின் கல்வி நிர்வாகச் செயற்பாடுகளிலும், வெளியீட்டுப் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், தேசியகல்வி நிறுவகம் உட்பட உயர் கல்வி பீடங்களில் அதிகாரிகளை நியமிக்கும்போது அதில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

இதைவிட தமிழ் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள் என்பனவற்றை தரமுயர்த்துவதிலும், அவற்றில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதிலும் அரசாங்கம் அசமந்தமாக இருந்து வருகின்றது.

இதைவிட வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளுக்கு நெருக்கமாக இராணுவ நிலைகள் அமைக்கப்பட்டிருப்பதால் தமிழ் மாணவர்களின் இயல்பான கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக தமிழினத்தின் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் கல்வி ரீதியான புறக்கணிப்புக்கள், நெருக்குவாரங்கள் தொடர்பான தமது கண்டனத்தை வெளியிட்டுள்ள தமிழர் ஆசிரியர்சங்கம், இப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கோரும் 26 கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தவும் தீர்மானித்துள்ளது.

அந்த அடிப்படையில் உலக ஆசிரியர் தினமானஎதிர்வரும் ஐந்தாம் திகதிசுகவீன பணிப்புறக் கணிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ள ஆசிரியர் சங்கத்தினர்,

தமது கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்த்து உடன் நடவடிக்கைகளை எடுக்கத் தவறின் வருகின்ற 24 ஆம் திகதி தொடக்கம் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, இப்போராட்டத்துக்காக இலங்கை முழுவதிலும் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் சகல தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (33)

## இராணுவத்திற்கு....

வரத்து அமைச்சிற்கு ரூ.13,338 மில்லியனிலிருந்து ரூ.7,790 மில்லியனாகவும், தொடருந்து அமைச்சுக்கு ரூ.12,900 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. நீதித்துறை அமைச்சுக்கு ரூ.3,948 மில்லியனி லிருந்து 5636 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு புனரமைப்பு மற்றும் மீளமைப்பு அமைச்சிற்காகரூபா 8322 மில்லியன் ஒதுக்கப்படடிருந்தது. தற்போது இத்தொகை ரூ.12.512 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு புனரமைப்பு மற்றும் மீளமைப்பு அமைச்சுக்காக ரூ.8,322 மில்லியன் ஒதுக்கப் பட்டிருந்தது. தற்போது இத்தொகை ரூ.12512ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

புத்த சாசன அமைச்சகத்திற்கும் ரூ.277மில்லியனிலிருந்து ரூ.490 மில்லியனாக நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## வீட்டின்....

பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதனால் உயிர்ச்தேசம் எதுவும் ஏற்படவில்லை எனினும் சிறியளவு பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது. (10)

## 13ஆவது....

ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை படையக தொடக்கப் பயிற்சிக்கல்லூரி பொறுப்பாளர் கேணல் ஆதவன் ஏற்றிவைத்தார். படையணிக் கொடியினை இம்ரான்-பாண்டியன் படையணி சிறப்புத் தளபதி வேலவன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து லெப். கேணல் இம்ரானின் சகோதரன் சுரேஸ் ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். அதைத்தொடர்ந்து மலர்வணக்கம் செலுத்தப்பட்டது.

அடுத்து மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் சங்கநாதம் குழுவினரின் மாவீரர் அஞ்சலி நடனம் நடைபெற்றது.

தலைமையுரையினை இம்ரான் பாண்டியன் படையணியின் பொறுப்பாளர்களில் ஒருவரானஅப்பன் நிகழ்த்தினார்.அடுத்து வரவேற்பு உரையினை இம்ரான்- பாண்டியன் படையணி பொறுப்பாளர்களில் ஒருவரான தனியரசு நிகழ்த்தினார்.

அதனையடுத்து ஒலிநாடா வெளியீட்டுரையினை புலிகளின் குரல்நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் நிகழ்த்தினர். மதிப்பீட்டு உரையினை க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார். தொடர்ந்து தமிழீழ தேசியத்தலைவர் அவர்களால் கரும்புலிகள்தினத்தன்று வெளியிட்டு வைக்கப்பட்ட தேசத்தின் புயல்கள் பாகம் 04 ஒலிநாடா அறிமுக வெளியீட்டினை தளபதி வேலவன் வெளியிட்டு வைக்க, திரைப்பட வெளியீட்டு பிரிவுப் பொறுப்பாளர் ராதா பெற்றுக்கொண்டார்

அடுத்து கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். இவர்களை கேணல் ஆதவன், சோதியா படையணி சிறப்பு தளபதி கேணல் துர்க்கா, வடபோர் முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன், கேணல்கிட்டு பீரங்கிப் படையணி சிறப்பு தளபதி மணிவண்ணன் ஆகியோர் கௌரவித்தனர்.

அடுத்து மகளிர் இசைக்குழுவின் நிகழ்வு நடைபெற்றது. போராளி சுவர்ணன் நன்றி யுரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது. (கு)

## ஓமந்தை....

நிரூபித்த பொழுதிலும், சோதனைச் சாவடியூடாக செல்லும் அனைவரையும் சோதனை இட தமக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த படையினர் பாராளுமன்ற உறுப்பினரின்உடமைகளைசோதனையிட்டதாக முறையிடப்பட்டுள்ளது. (32)

# சாவு அறிவித்தல்

## கந்தையா சபாபதிப்பிள்ளை (ஓவசியர்)

கந்தையா சபாபதிப்பிள்ளை (ஓவசியர்)நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி இலக்கம் 31,ஜெயந்திநகரை வசிப்பிடமாகவும் நீர்கொழும்பை தற்காலிக முகவரியாகக் கொண்டவருமான கந்தையா சபாபதிப்பிள்ளை (ஓவசியர்) 01.10.2005 சனிக்கிழமை இறையடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற காமாட்சி அம்மாவின் அன்புக் கணவரும் கருணாகரன் (ஜேர்மன்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), இராஜேஸ்வரன் (குட்டி லண்டன்), கணேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற மனோகரன் ரமணி (நோர்வே), மீரா (நீர்கொழும்பு), சிவகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாரதா, கமலின்,சாந்தினி (ஆசிரிய ஆலோசகர் துணுக்காய்) வினோதினி,சிறிதரன், செல்வா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சூரியா, தனுசியா,ஆரணி ஆரபி,அபி காலஞ்சென்ற கௌலினி, கௌசிகன்,திருச்சிகன், திவ்வியா, கோபிகா ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் 6.10.2005 வியாழக்கிழமை நடைபெற்று பிற்பகல் 4.00மணிக்கு நீர்கொழும்பு இந்து மயானத்தில்பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:-
சாந்தினி இராஜேஸ்வரன்
(ஆசிரியஆலோசகர் துணுக்காய்).

(6015)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.